விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 049 வள்ளுவர் ஆண்டு 2057 தை 23 வெள்ளிக்கிழமை (06.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= வைப்பு

# இயக்கச்சியில் 25 ஏக்கர் காணி இராணுவத்தினரின் தேவைக்காக சுவீகரிப்பு

## நிலம் கிடைக்கும் என எதிர்பார்த்த மக்கள் ஏமாற்றம்

(பளை)

இயக்கச்சியில் 25 ஏக்கர் காணி இராணுவத்தினரின் தேவைக்காக சுவீகரிக்கப்படவுள்ளது.

இலங்கை இராணுவத்தின் 4ஆவது பட்டாலியனின் தேவைக்காகவே மேற்படி காணி சுவீகரிக்கப்படவுள்ளது.

பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களுக்குச் சொந்தமான மேற்படிக் காணிகளே இராணுவத்தினரின் தேவைக்காக சுவீகரிக்கப்படவுள்ளது.

காணி சுவீகரிப்புத் தொடர்பில் சம்பந்தப்பட்ட காணி உரிமையாளர்களுக்குப் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் மூலம் எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த இராணுவ முகாம் அமைந்துள்ள காணிகள்

16ஆம் பக்கம் பார்க்க

## 1,500 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் பலகைகள்



### சபையில் பிரதமர் ஹரிணி

(கொழும்பு)

2026ஆம் ஆண்டு முதற்கட்டமாக 1500 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் பலகைகள்

15ஆம் பக்கம் பார்க்க

## அநுர அரசாங்க ஆட்சியிலும் பயங்கரவாதச் சட்டம் தொடர்ந்தும் பயன்பாடு

### மனித உரிமைகள் கண்காணிப்பகம்

(நியூயோர்க்)

அநுர அரசாங்க ஆட்சியிலும் பயங்கரவாதச் சட்டம் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக் காட்டியுள்ளது. (04ஆம் பக்கம் பார்க்க)

HUMAN RIGHTS WATCH

## இலங்கையின் முதலாவது பெண் கணக்காய்வாளர் நாயகமாக சமுதிகா சத்தியப் பிரமாணம்



15ஆம் பக்கம் பார்க்க

## 30% மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும்

### எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடி உறுதி



(கொழும்பு)

வாக்குறுதி அளித்தபடி மூன்று ஆண்டுகளுக்குள் மின்சாரக் கட்டணத்தை 30 சத வீதத்தால் குறைப்பதாக எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து

16ஆம் பக்கம் பார்க்க

## மீனவர்கள் மீது தாக்குதல் குற்றச்சாட்டை மறுத்த இந்திய உயர்ஸ்தானிகரகம்

(கொழும்பு)

கடந்த ஜனவரி 29ஆம் திகதி கடலில் வைத்து இலங்கைக் கடற்றொழிலாளர்கள் மீது இந்தியக் கடலோரக் காவல்படையினர் தாக்குதல் நடத்தியதாக வெளியான செய்திகளை இலங்கைக்கான

15ஆம் பக்கம் பார்க்க

## புதிய அரசியலமைப்புத் தொடர்பில் தேசிய கலந்துரையாடலை அரசு ஆரம்பிக்க வேண்டும்

### எதிர்க்கட்சிகள் கூட்டாக வலியுறுத்து

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை வரைவதற்கான தேசிய அளவிலான கலந்துரையாடலை அரசாங்கம் உடனடியாக ஆரம்பித்து அதில் தீவிரமாகப் பங்கேற்க வேண்டும் எனப் பல அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்

15ஆம் பக்கம் பார்க்க

## ரில்வின் சில்வா இந்தியா பயணம்

(கொழும்பு)

இந்திய கலாசார உறவுகள் கவுன்சிலின் அழைப்பின் பேரில், மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தலைமையிலான குழு, நேற்றுக் காலை இந்தியாவின் புதுடில்லிக்குப் புறப்

15ஆம் பக்கம் பார்க்க

## பருத்தித்துறை நோக்கிப் பயணித்த இ.போ.ச பேருந்தின் பிரேக் செயலிழப்பு

### மயிரிழையில் உயிர்தப்பிய பயணிகள்

(கரணவாய்)


யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் இருந்து நேற்றுக் காலை பருத்தித்துறை நோக்கி 6 மணிக்கு புறப்பட்ட அரசு பேருந்து நாகர்கோவில்

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நின்று காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



பிறப்பு 27.11.1944

இறப்பு 04.02.2026

### சந்திரபோஸ் சுப்பிரமணியம்

(முன்னாள் ஆசிரியர் - கொழும்பு புனித தோமஸ் கல்லூரி, யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரி மற்றும் பதுளை சரஸ்வதி மகா வித்தியாலயம்)

மரியாதைக்குரிய அமரர் சுப்பிரமணியம் தம்பதியரின் புதல்வரும் சாந்தலக்ஷ்மி அவர்களின் அன்புக் கணவருமாகிய திரு.சந்திரபோஸ் சுப்பிரமணியம் அவர்கள் வண்ணார் பண்ணையில் பிறந்து, பின்னர் கனடா டொராண்டோவில் வாழ்ந்து வந்தவரும் பதுளை சரஸ்வதி மகா வித்தியாலயம், யாழ் வைத்தீஸ்வரா கல்லூரி மற்றும் கொழும்பு புனித தோமஸ் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களில் ஆசிரியராகப் பணியாற்றி, அறிவையும் மனித நேயத்தையும் விதைத்து எண்ணற்ற மாணவர்களின் வாழ்வை உயர்த்தியவரும் இலக்கிய ஆர்வலர், நூல் ஆசிரியர், சமூக ஆர்வலர் எனும் பல முகங்களைக் கொண்ட அன்னார் கடந்த (04.02.2026) புதன் கிழமை அன்று காலமானார்.

தனது இறுதி விருப்பத்தின்படி, டொராண்டோ பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு தன் உடலை தானமாக வழங்கி, அறிவுக்கும் மனிதகுல நலனுக்கும் இறுதியிலும் சேவை செய்தவர்.

அன்னாரது நினைவாக நடைபெறும் அஞ்சலி நிகழ்வு கனடாவில் பின்னர் அறிவிக்கப்படும்.

அறிவையும் மனிதத்தையும்
வாழ்நாள் முழுவதும் போதித்த
அந்த உன்னத ஆன்மா
எங்கள் நினைவுகளில் என்றும் வாழும்

தொடர்புகளுக்கு +1 647 308 7055

தகவல்: குடும்பத்தினர்

(6753)

## கொக்குவில் இந்துக் கல்லூரியில் பஞ்சலிங்கம் நினைவுக்கூட்டம்

கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் ஓய்வு நிலை அதிபரும் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியத்தின் தலைவரும் உரும்பிராய் கிட்ஸ் பார்க், திருநெல்வேலி சிமார்ட் கிட்ஸ் ஆகியவற்றின் நிறுவுனருமான அமரர் அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை மறுதினம் (08) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். (ம-7)


## சிறுவன் உயிரிழப்பு

மேல் மாடியிலிருந்து கொங்க்ரீட் துண்டு விழுந்ததில் 7 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் கொழும்பு முகத்துவாரம் பகுதியில் அமைந்துள்ள வீடமைப்புத் தொகுதியில் இடம்பெற்றுள்ளது.

சிறுவன் தனது பாட்டியுடன் வீட்டு வளாகத்திற்கு அருகிலுள்ள ஒரு கடைக்கு அருகில் நின்று கொண்டிருந்த போது, கான்கிரீட் ஸ்லாப்பின் துண்டுகள் உடைந்து விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 15.04.1939

மறைவு 05.02.2026

வணிகக்கல்வி பாட சிரேஷ்ட ஆசிரியர் திரு.குருநாதன் சதீஸ் அவர்களின் பாசமிகு தாயார்

### குருநாதன் தையல்நாயகி

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றுள்ள குடும்ப உறவுகளுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/வேலணை மத்திய கல்லூரி

(C-4951)

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 - 11 - 1953



இறப்பு 05 - 02 - 2026

### தாமோதரம்பிள்ளை கணேசலிங்கம்

(உரிமையாளர் - பழமுதிர்ச்சோலை பல்பொருள் வாணிபம் கந்தர்மடச்சந்தி)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை கணேசலிங்கம் அவர்கள் நேற்று (05.02.2026) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - நவரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஞானரூபி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் பரமு, பஞ்சலிங்கம், செல்வராணி, கமலாதேவி, சோதிராணி, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவலிங்கம், வசந்தநாதன் மற்றும் குகானந்தன், ஆனந்தலிங்கம், சுந்தரராஜா, வசந்தி, ஜெயகுமார், சத்தியகுமார், உதயகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2026) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில்(இல.210, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.210, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

தகவல் : குடும்பத்தினர் 077 983 6081

(6755)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 'காந்தீயம்' இதழ் வெளிவந்து விட்டது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அதிகார பூர்வ ஏடான "காந்தீயம்" இதழின் ஜனவரி - மார்ச் இதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழில் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் சு. சுசீந்திரராஜா எழுதிய "ஹன்டி பேரின்ப நாயகம் அவர்களிடம் மூன்று மாத படிப்பு ஏற்படுத்திய தொடர்பு" என்ற கட்டுரையும் "வினோபாவின் கல்விச் சிந்தனைகள்", இதழாசிரியர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி எழுதிய "ஆன்மிக அரசியல் தலைவரான மகாத்மா காந்தி", "தேசிய கல்விக் கொள்கைக்கு உரமூட்டிய ஹன்டி பேரின்பநாயகமும் சுவாமி விபுலானந்தரும்" என்ற ஆக்கங்களோடு உருத்திரபுரம் காந்தி நிலையத்தின் செயற்பாடுகள் மற்றும் காந்தி தின நிகழ்வுகளின் புகைப் படங்களும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. (8)

## கிளிநொச்சியில் குளவிக் கொட்டுக்கு இலக்கான 39 மாணவர்கள்

# வைத்தியசாலையில் அனுமதி

(தருமபுரம்)

**கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நேற்றைய தினம் காலை குளவி கொட்டுக்கு இலக்கான 39 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கான பயிற்சிகளுக்கு மாணவர்கள் தயாராகிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் மூன்றாவது மாடியில் காணப்பட்ட குளவிக்கூடு கலைந்தமையால் 39 மாணவர்களும் 3 ஆசிரியர்களும் குளவிக்கொட்டுக்கு இலக்காகினர்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், ஏனைய மாண வர்களை பாதுகாப்பாக பாடசாலை வளாகத்தை விட்டு வெளியேற்றினர்.

பின்னர் மாணவர்கள் அனைவரும் கிளிநொச்சி ரோட்ரிக்கோ மைதானத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதோடு, பாதிக்கப்பட்ட மாணவர்கள் நோயாளர் காவு வண்டியில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

குறித்த குளவிக்கூட்டினை அகற்றுவதற்கான நடவடிக்கையினை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மேற்கொண்டனர். (8-316)

## 'எங்கள் முற்றம்' இதழ் வெளிவந்து விட்டது

(யாழ்ப்பாணம்)

மக்கள் கலை இலக்கியப் பேரவையின் "எங்கள் முற்றம்" கலை இலக்கிய சமூக விஞ்ஞான பெப்ரவரி மாதத்துக்கான இதழ்: 11 வெளிவந்து விட்டது.

இவ் இதழில் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் போன்ற பல ஆக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (8)

## பால்மா பொதிகள் வழங்கல்

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர் வே.கரிகாலனின் ஒழுங்குபடுத்தலில், கனடா வன்னி சங்கத்தின் நிதிப் பங்களிப்புடன் குழந்தையுள்ள 106 குடும்பங் களுக்கு பால்மா பொதிகள் கடந்த 4 ஆம் திகதி வழங் கப்பட்டன.

நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபைத் தவிசாளர், உடையார்கட்டு கிராம சேவையாளர், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (8-299)

## நாவற்குழியில் மாட்டுடன் மோதி அம்புலன்ஸ் வாகனம் விபத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலைப் பொழுதில் அம்புலன்ஸ் வாகனம் ஒன்று மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக நோயாளி ஒருவரை யாழ் போதனா வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்ற அம்புலன்ஸ் வாகனமே இவ்வாறு ஏ-9 வீதியில் மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் அம்புலன்ஸ் வண்டியில் சென்றவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத போதிலும் அம்புலன்ஸ் வாகனம் கடுமையாக சேதமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (8-30)

## யா/ஸ்கந்தவரோதய மாணவி மருத்துவ பீடத்திற்கு தெரிவு




(யாழ்ப்பாணம்)

யா/ஸ்கந்தவரோதயா கல்லூரியைச் சேர்ந்த மாணவி செ.பரணிகா இணைபாடவிதான செயற்பாடுகளில் சாதித்ததன் ஊடாக 2024 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ளார்.

மிருகவியல் வைத்திய துறைக்கு தெரிவாகியுள்ள குறித்த மாணவி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தேசிய மட்ட சாதனையாளர்கள் நேர்முகத் தேர்வின் பின்னர் மருத்துவபீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2024 ஆம் ஆண்டில் யாழ்.மாவட்டத்தில் இருந்து 90 மாணவர்கள் மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது (8)

## தியாகி நடராஜனின் 69 ஆவது ஆண்டு நினைவேந்தல்



(அராலி)

தமிழ்த் தேசியப் பற்றாளர் தியாகி திருமலை நடராஜனின் 69 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தாயக நினைவேந்தல் பணிமனையால் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 04.02.1957 அன்று இலங்கையின் ஒன்பதாவது சுதந்திர தின நாளன்று தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து தமிழர் தேசமெங்கும் இலங்கையின் சுதந்திரதினத்தை தமிழர்கள் கரிநாளாக பகிஷ்கரித்தனர்.

திருமலையில் உயரமாக பறக்கவிடப்பட்டிருந்த சிங்கக் கொடியை அகற்றி கறுப்புக் கொடியைக் கட்டமுயன்ற இனப்பற்றும் தேசப்பற்றும் நிரம்பிய 22 வயது இளைஞரான தியாகி நடராஜன், சிங்கள அரச படைகளால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார். அவர் தேசியக் கொடியுடன் மண்ணில் வீழ்ந்து மாய்ந்த நிகழ்வு அன்று வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தையே உலுக்கியது.

நிகழ்வில் தாயக நினைவேந்தல் குழுவினர் மற்றும் தமிழ்த் தேசிய பற்றாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டு தியாகி நடராஜன் அவர்களின் உருவப்படத்திற்கு பொதுச்சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செய்து மாலை அணிவித்து கருத்துரைகள் வழங்கியிருந்தனர். (8-104)



அமெரிக்காவில் அண்மையில் இயற்கை எய்திய ஈழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான தம்பித்துரை முத்துக்குமாரசாமியை நினைவுகூரும் அஞ்சலி நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை, திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் அரசியல் ஆய்வாளர் சி.சு.யோதிலிங்கம் எழுதிய "தமிழ்த்தேசியப் போராட்டத்தின் ஆரம்பகர்த்தா த. முத்துக்குமாரசாமி" என்ற கையேடும் வெளியிடப்பட்டது.

## பரு. துறை நகரசபைக்குட்பட்ட உணவகங்களில் திடீர் சோதனை

(கரணவாய்)

பருத்தித்துறை நகரசபை ஆளுகைக்குட்பட்ட உணவகங்களில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டு லஞ்சீர் தடை நடை முறை குறித்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வின்சென் டி போல் டக்ளஸ் போல் தலைமையில் நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஷ் இணைந்து கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு இத் திடீர் சோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது லஞ்சீர் தடை நடைமுறை பின்பற்றப்படாதது என்பது நேரில் பார்வையிடப்பட்டு தொடர்ந்தும் அதனைப்பின்பற்றுமாறு உணவக தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

கடந்த 01.01.2026 முதல் உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்களிலும், பெப்ரவரி 1 முதல் திருமண மண்டபங்கள், வீடுகள், அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட இடங்களில் இடம் பெறும் நிகழ்வுகளின் போதும் உணவு பரிமாற்றத்திற்கு லஞ்சீர் பயன்படுத்த பருத்தித்துறை நகரசபை முற்றாகத் தடை விதிக்கப்பட்டு வலுவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
06 - 11 - 1950



இறப்பு
05 - 02 - 2026

## கணேசன் ஜெயதேவி

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கு கே.கே.எஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசன் ஜெயதேவி அவர்கள் நேற்று (05.02.2026) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் கணேசன்(நடேசு) அவர்களின் பாசமிகு கணவரும் தனலக்சுமி அவர்களின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சர்மினி, முகுந்தன், சயானி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காண்டீபன், பாலமுரளி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆத்மிகன், அனாமிகன், நிதுன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2026) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 138 2641
077 950 1469

தகவல் :
குடும்பத்தினர்

(6757)

# இம்ரான் கவாஜாவை களமிறக்கியது ஐ.சி.சி!



இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடரில் இந்தியாவுக்கு எதிரான குழுநிலை போட்டியில் விளையாடப் பாகிஸ்தான் மறுப்புத் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து, நிலவும் முட்டுக்கட்டையைத் தீர்க்க சர்வதேச கிரிக்கெட் பேரவை தீவிர முயற்சிகளில் இறங்கியுள்ளது. இந்தியா - பாகிஸ்தான் இடையிலான போட்டி உலகக் கிண்ணத்தில் மிக முக்கியமான மற்றும் அதிக வருவாய் ஈட்டித் தரும் போட்டியாகும்.

இதனைப் பாகிஸ்தான் புறக்கணிப்பது தொடரின் வெற்றியைப் பாதிக்கும் என்பதால் சர்வதேச கிரிக்கெட் பேரவை தனது கவலையை வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரத்தை இராஜதந்திர ரீதியில் கையாள, சர்வதேச கிரிக்கெட் பேரவையின் துணைத் தலைவர் இம்ரான் கவாஜாவை சர்வதேச கிரிக்கெட் பேரவை நியமித்துள்ளது.

சிங்கப்பூர் கிரிக்கெட் சங் கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கவாஜா, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்துவார்.

எதிர் வரும் 15ஆம் திகதி திட்டமிடப்பட்டுள்ள போட்டியில் பாகிஸ்தான் பங்கேற்பதை உறுதி செய்வதுடன், அவர்களின் பிடிவாதமான முடிவை மறுபரிசீலனை செய்ய வைப்பதே இவரின் முக்கிய பணியாகும்.

பங்களாதேஷ் விவகாரம் உள்ளிட்ட அரசியல் காரணங்களை முன்னிறுத்தி, இந்தியாவுக்கு எதிரான போட்டியைப் புறக்கணிப்பதாகப் பாகிஸ்தான் அரசாங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்தது. இருப்பினும், இந்த முடிவை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இன்னும் உத்தியோகபூர்வமாக சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கு எழுத் துப்பூர்வமாக அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## பயங்கரவாதச்...

2025 ஆம் ஆண்டு உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நாடுகளினதும் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள விரிவான அறிக்கையில் இலங்கை தொடர்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

இலங்கையில் பதிவான தன்னிச்சையான தடுத்து வைப்புகள், பொலிஸ்காவலின் கீழான சித்திரவதைகள் மற்றும் உயிரிழப்புக்கள் என்பன பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் கடந்தகால மீறல்களுக்குக் காரணமாக அமைந்த கட்டமைப்பு ரீதியான நிலைவரங்கள் இன்னமும் தொடர்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்தகால மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் பாதுகாப்புத் தரப்பினரின் தொடர் அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்து வருவதுடன் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலும் அரச அதிகாரிகளினாலேயே காணி உரிமைகள் மற்றும் மத உரிமைகள் என்பன மீறப்படுகின்றன.

அதேவேளை 1983 - 2009 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தின்போது நிகழ்த்தப்பட்ட மிகமோசமான போர்க்குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு அரசாங்கங்கள் தவறியிருக்கின்றன. தேசிய நல்லிணக்கம் சார்ந்த வாக்குறுதிகளின் இடையே தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு அநுர குமார திஸாநாயக்க அரசாங்கம் மிகச்சொற்ப விடயங்களையே செய்திருக்கிறது.

அதேபோன்று சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகத்தை ஸ்தாபித்தல், பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்குதல் மற்றும் நிகழ்நிலைக்காப்புச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல் என்பன உள்ளடங்கலாக சட்ட மறுசீரமைப்புக்கள் தொடர்பில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

இருப்பினும் ஊழலை முறியடிப்பதில் ஓரளவு முன்னேற்றம் அடையப்பட்டிருக்கிறது. குறிப்பாக அரச நிதியின் முறைகேடான பயன்பாட்டுக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அடுத்ததாக இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையில் இடம்பெற்ற 26 வருடகால யுத்தத்தில் சுமார் 100,000 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட் ஞீடனர். இக்காலப்பகுதியில் அரச படையினர் சித்திரவதைகள், சட்டவிரோதப் படுகொலைகள், பாலியல் வன்புணர்வு, பாலியல் வன்முறைகள், வலிந்து காணாமலாக்கல் மற்றும் பொதுமக்கள் மீதான ஒடுக்குமுறைத் தாக் குதல்கள் உள்ளிட்ட மிக மோசமான மீறல்களில் ஈடுபட்டனர். அதேபோன்று தற் கொலைக்குண்டுத்தாக்குதல், பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் சிறுவர் போராளிகள் உள்ளிட்ட மீறல்களில் விடுதலைப் புலிகள் இயக்கமும் ஈடுபட்டது.

இம்மீறல்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கான நம்பத்தகுந்த உள்ளகப்பொறிமுறைகள் இன்மை மற்றும் பாதிக்கப்பட்ட சில சமூகங்களுக்கு எதிராகத் தற்போதும் தொடரும் ஒடுக் குமுறைகள் என்பவற்றின் காரணமாக இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தை மேலும் இரு வருடங்களுக்குத் தொடர்வதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை செயற்பாட்டாளர்கள் பலரும் வர வேற்றிருந்தனர். இந்தக் குற்றங்களை புதியதொரு உள்ளகப்பொறிமுறையின் ஊடாக அணுகுவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்த போதிலும், அதுபற்றிய விபரங்கள் எதனையும் அறிவிக்கவில்லை. அதே வேளை மறுபுறம் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் உள்ளகப்பொறிமுறைகள் தொடர்பில் தமது நம்பிக்கையீனத்தை அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர். மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக முன்னைய அரசாங்கங்களினால் குறைந் தபட்சம் சுமார் 10 ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்ட போதிலும், அவை பொறுப்புக் கூறல் உறுதிப்படுத்தப்படுவதற்கோ அல்லது வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான உண்மைகள் வெளிப்படுத்தப்படுவதற்கோ வழிவகுக்கவில்லை.

அதுமாத்திரமன்றி 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு அரசு உடந்தையாக செயற்பட்டதாக சில தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆதரித்திருப்பினும் அத்தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கம் இன்னமும் நம்பத்தகுந்த விசாரணை களை முன்னெடுக்கவில்லை. தண்டனைகளிலிருந்து விடுபடும்போக்கு வலுவடைந்தமையானது மீறல்கள் தொடர்வதற்கு இடமளித்தது.


அத்தோடு மனிதப் புதைகுழிகள் தொடர்பில் செயற்திறன்மிக்க விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான போதிய தொழில்நுட்ப வசதிகள் அரசாங்கத்திடம் இல்லை. அதேவேளை கடந்தகாலங்களில் நிலவிய அரசியல் தன் முனைப்பின்மையானது இதுபற்றிய விசாரணைகள் மழுங்கடிக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்தது. அதன் அர்த்தம் எந்தவொரு எலும்புக்கூடும் யாருடையவை எனக்கண்டறியப்படவோ அல்லது ஏனைய ஆதாரங்கள் முறையாகப் பேணப்படவோ இல்லை.

மேலும் நீண்டகால யுத்தத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிக்காகப் போராடும் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினர் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களை பொலிஸார் மற்றும் புலனாய்வுப்பிரிவினர் தொடர்ச்சியாகக் கண்காணித்தும் அவர்களுக்கு எதிராக ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்தும் வருகின்றனர்.

அதேவேளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்த போதிலும் கடந்த காலங்களில் அச்சட்டத்தின் பிரயோகம் வெகுவாக அதிகரித்துள்ளது. குறிப்பாக 2024 ஆம் ஆண்டு 38 வழக்குகளிலும் 2025 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மாத்திரம் 49 வழக்குகளிலும் பொலிஸாரால் பயங்கரவாதத் தடைச்சட்டம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது என அவ்வறிக்கையில் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய தலைமுறைக்கு வழிவிடுவோம்-ரணில்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி "ஸ்மார்ட்" அரசியலைத் தழுவிய ஒரு புதிய தலை முறைத் தலைமைத்துவத்திற்காகத் தயாராகி வருவதாக அக்கட்சியின் தலை வரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகமான சிறி கொத்தவில் "SMART UNP" டிஜிற்றல் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் பிறந்த தலை முறையைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

அரசியல் கட்சிகளையும் அரசிய லையும் அடுத்த தலைமுறையிடம் ஒப்படைப்பதில் ஐக்கிய தேசியக் கட்சி முன்னின்று செயற்பட வேண்டும்.

அத்தோடு எனக்கு இப்போது 70 வயதுக்கு மேல் ஆகிறது. இங்குள்ளவர்க ளில் பலருக்கு 70, 60 மற்றும் 50 வயதுக்கு மேல் ஆகிறது. இனிவரும் காலம் இளைஞர்களுக்கானது என் அவர் சுட்டிக்காட்டினார்.

மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர் தன "மில்லினியர்" தலைமுறையைத் தயார்படுத்தினார். நாம் இப்போது "ஜென் ஸீ" தலைமுறையிடம் பொறுப்பு களை ஒப்படைக்கத் தயாராக வேண்டும்.

நாம் ஸ்மார்ட் அரசியலை நோக்கி நகர வேண்டும் மற்றும் தொழில் நுட்பங்களைத் தழுவ வேண்டும்.

ஜே.ஆர். ஜயவர்தனவின் யுகத்தில் நாம் இல்லை. நாம் ட்ரம்பின் உலகில் வாழ்கிறோம். அதே சமயம் ட்ரம்பிற்குச் சவால் விடும் சீனாவின் ஆதிக்கம் நிறைந்த உலகிலும் வாழ்கிறோம்.

எமது அண்டை நாடான இந்தியா ஒரு வல்லரசாக உருவெடுத்து வரும் காலத்திலும் நாம் வாழ்கிறோம். இத் தகைய சூழ்நிலைகளை நாம் எதிர் கொள்ள வேண்டும்.

பல கட்சி ஜனநாயக ஆட்சி முறையி லேயே நாம் முன்னேறியிருக்கின்றோம். அதனை நிலைநிறுத்த சகல சக்திகளும் ஒன்றிணைய வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மத்தள விமான நிலையத்திற்கு அதிகளவு பயணிகள் வருகை

(கொழும்பு)

மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையம் ஆரம்பிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையான காலப் பகுதியில், 2025 ஆம் ஆண்டிலேயே அதிகளவான பயணிகள் கையாளப்பட்டு புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளதாக விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் தெரிவித்து ள்ளது.

2025 ஆம் ஆண்டில் மட்டும் மத்தள விமான நிலையம் ஊடாக 140,614 பயணிகள் பயணம் செய்துள்ளனர். அத்துடன், அந்த ஆண்டில் 703 சர்வதேச விமானங்கள் வெற்றிகரமாகக் கையாளப்பட்டுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளாக பய ணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டு ள்ள தொடர்ச்சியான வளர்ச்சியும், புதிய அரசாங்கம் இந்த விமான நிலையத்தின் மீது செலுத்திய விசேட கவனமுமே இந்த வெற்றிக்கான பிரதான காரணங்களாகக் கூறப்படுகின்றன.

முன்னதாக வனவிலங்கு அச்சுறு த்தல்கள் மற்றும் பாதுகாப்பு காரணங் களால் பல விமான நிறுவனங்கள் மத் தளவிற்கு வருவதற்குத் தயக்கம் காட்டி வந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1991- இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
11 இல் சூரி செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, கிராம சேவகர்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/14763

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா:27 1/2
7இல் சூரி செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: MBA, Project Manager (pvt)
எதிர்பார்ப்பு: உத்தியோகம், சைவபோசனம்
தொ.இ: B/14955

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: NCT Civil Engineer, TO
எதிர்பார்ப்பு: தகுதியானபெண்
தொ.இ: B/14957

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
2 இல் செவ்
உயரம்:5'11"
தகைமை/தொழில்: Dip in IT, LLB, Legal Cleark
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16375

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 46
7 இல் செவ்
உயரம்: 5'10"
தகைமை/தொழில் Diploma, Avation Officer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத் தானவர்
தொ.இ: B/16376

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: அனுசம்
2 இல் செவ்
கி.பா: 15 3/4
உயரம்: 5'
தகைமை/தொழில்: BA final year
எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகன்
தொ.இ: G/14799

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 11
உயரம்: 5'3"
தகைமை/தொழில் : BSc, Software Engineer
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16120

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 66
7 இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Bsc, Engineer
எதிர்பார்ப்பு: Engineer, Doctor
தொ.இ: G/14626

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 28
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BCom, DO
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15919

பிறப்பு:1991- இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 12 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில்: BSc, Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/14939

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை


# இராசிபலன்

06.02.2026
தை 23, வெள்ளிக்கிழமை
பஞ்சமி பின்னிரவு 3.57 மணிவரை

அத்தம் பின்னிரவு 2.56 மணிவரை
சுப நேரம் 6.35-8.05 மணிவரை
இராகுகாலம் 11.05-12.35 மணிவரை

அமிர்த சித்தம்,
சுபமுகூர்த்த நாள்
சந்திராஷ்டமம்: சதயம்

வளவன்

**மேஷம்**: நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி கூடும், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும்.

**இடபம்**: பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, கல்யாணக்கனவுகள் நனவாகலாம், வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு.

**மிதுனம்**: பொதுக்காரியங்களில் நாட்டமுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கடகம்**: வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கனிவாகப் பேசி காரியங்களைச் சாதிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**: ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பேச்சில் இனிமை தொடரும், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**கன்னி**: பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்**: புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்யும் எண்ணம் உருவாகும், ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் சூழ்நிலை ஏற்படலாம்.

**விருச்சிகம்**: பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உயர்வான எண்ணங்கள் மனதில் தோன்றும், விருந்தினர் வருகையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**தனுசு**: எதிர்கால நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.

**மகரம்**: மருத்துவச் செலவுகள் குறைந்து மன்நிம்மதி கிடைக்கும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்.

**கும்பம்**: மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**மீனம்**: சொந்த பந்தங்களின் வருகையுண்டு, குடும்பத்தினரிடையே குதூகலம் கூடும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

ஒரு குழந்தைக்குத் தாய் இருக்கும் இடம் தான் சொர்க்கம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரம் 1 இற்கான மாணவர் அனுமதியில் வீழ்ச்சி

## புள்ளிவிபரங்கள் வெளிப்படுத்திய தகவல்கள்

**(கொழும்பு)**
**நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக முதலாம் ஆண்டுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம் வெளியிட்டுள்ள புள்ளிவிபர அறிக்கைகளின் (2023-2025) தரவுகளின் அடிப்படையில், இது வெளி வந்துள்ளது.

இலங்கையின் அரச பாடசாலைகளில் பயிலும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை கடந்த மூன்று ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் 38 இலட்சத்து 82 ஆயிரத்து 688 ஆக இருந்த மொத்த மாணவர் எண்ணிக்கை, 2024 இல் 38 இலட்சத்து 16 ஆயிரத்து 234 ஆகவும், 2025 இல் 37 இலட்சத்து 47 ஆயிரத்து 544 ஆகவும் குறைந்துள்ளது. இது 2023 முதல் 2025 வரையிலான காலப்பகுதியில் சுமார் 3.48 சதவீத ஒட்டு மொத்த வீழ்ச்சியாகும்.

பாலின ரீதியாகப் பார்க்கும்போது, மாணவர்களின் விகிதம் 49.5வீதம் ஆகவும் மாணவிகளின் விகிதம் 50.5 வீதம் ஆகவும் அனைத்து ஆண்டுகளிலும் நிலையாகக் காணப்படுகிறது. முதலாம் தர அனுமதி - ஒரு பெரும் சரிவு, பாடசாலைகளின் ஆரம்பக் கட்ட அனுமதியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. (நி)

## ஜனாதிபதி இந்தியா விஜயம்



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க, இந்த மாத இறுதியில் இந்தியாவின் புது டில்லியில் நடைபெற வுள்ள AI ,தாக்க உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளதாக உத்தியோகப் பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மகிஷினி கொலோன்னே இத்தகவலை உறுதிப் படுத்தியுள்ளார். (நி)

## துப்பாக்கி, தோட்டாக்கள் தெஹிவளையில் மீட்பு

(கொழும்பு)

தெஹிவளை வைத்தியா வீதியில் ஒரு கைத்துப்பாக்கி மற்றும் சில தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெஹிவளை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு நேற்று ஒரு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு துப்பாக்கியை மீட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (நி)

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்கவில் இருவர் கைது

(கொழும்பு)


சட்டவிரோதமாக விமானம் மூலம் நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், நடத்தப்பட்ட சோதனையில் 57,200 சிகரெட்டுகள் அடங்கிய 286 அட்டைப் பெட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன. 18 மற்றும் 42 வயதுடைய சந்தேக நபர்கள் இஹல கொட்டாரமுல்ல பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு மேற்கொண்டு வருகிறது. (நி)

# விடுதலைப்புலிகளுக்கு அஞ்சி நடுங்கும் அரசாங்கம்

## சரத் வீரசேகரவின் கண்டுபிடிப்பு



(கொழும்பு)

அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பயந்து செயற்படுவதோடு அவர்களின் மனம் நோகாத படி நடந்து கொள்வதாக முன்னாள் அமைச்சரும் மொட்டுக் கட்சியின் உறுப்பினருமான சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் கொண்டாடப்பட்ட 78 ஆவது சுதந்திர தினம் தொடர்பில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே இதனை தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1972 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்த போதிலும் 2009 ஆம் ஆண்டே எமது நாட்டுக்கு உண்மையான சுதந்திரம் கிடைத்தது.

அந்த யுத்தத்தில் முன்னிலை வகித்த இலங்கை இராணுவத்தின் விசேட படையணி மற்றும் கொமாண்டோ படையணிகள் நடைபவனி செய்யும் போது வர்ணனையாளர் டித்வா சூறாவளியில் மக்களை பாதுகாத்தவர்கள் என்றே குறிப்பிட்டனர்.

பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை பாதுகாத்தவர்கள் என தெரிவிக்கவில்லை.

இந்த சுதந்திரதின விழா தேசியத் திறகாகவா அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சார்பான தமிழ் பிரிவினைவாதிகளான புலம் பெயர் தமிழர்களை சந்தோசப் படுத்தவா? என கேட்கத் தோன்றுகிறது.

2009 ஆம் ஆண்டு இறுதிப் போரில் பயன்படுத்தப்பட்ட கனரக வாகனங்கள் மற்றும் மல்டி பெரல்கள் வாகன தொடரணியில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. இவை முதுகெலும்பு இல்லாத செயற்பாடுகளாகும்.

நாட்டில் இருந்த எந்த அரசாங்கமும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவில்லை என குறிப்பிட்டுள்ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 400 | 400 | 400 | 250 |
| உருளைக்கிழங்கு | 160 | 150 | 150 | 160 | -- | 370 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 500 | 500 | 500 | 500 |
| தக்காளி | 250 | 200 | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 250 | 150 | 180 | 100 |
| கோவா | 250 | 250 | 300 | 300 | 280 | 220 |
| கரட் | 300 | 450 | 500 | 450 | 450 | 380 |
| பூசணி | 100 | 140 | 100 | 150 | 150 | 80 |
| புடோல் | 160 | 150 | 200 | 300 | 250 | 250 |
| வாழைக்காய் | 150 | 200 | 200 | 250 | 150 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 300 | 250 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 200 | 200 | 150 | -- |
| பாகற்காய் | 600 | 500 | 600 | 600 | 500 | 400 |
| வெண்டக்காய் | 350 | 350 | 400 | 400 | 250 | 250 |
| கருணைக் கிழங்கு | 250 | 260 | 300 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 450 | 500 | 400 | 600 | 400 | 350 |
| லீக்ஸ் | 400 | 450 | 350 | 400 | 400 | 370 |
| பீற்றூட் | 250 | 300 | 400 | 300 | 300 | 330 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 1000 | 600 | 850 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 300 | 250 | 400 | 300 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 300 | 360 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 40-140 | 200 | 100 | -- | 70 |
| தேசிக்காய் | 200 | 150 | 150 | 150 | 200 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 160 | 150 | 120-160 | -- | 110 |
| இராசவள்ளி | 600 | 500 | 400 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 150 | 150 | 200 | 200 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | 150 | 200 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 200 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 50 | 50 | 100 | 100 | -- | 80 |
| [illegible] | 150 | -- | 150 | 200 | -- | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும் சுன்னாகம் சமுர்த்தி வங்கியும் இணைந்து நடத்தும் "தேசிய பொங்கல் விழா" இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் சமுர்த்தி வங்கியில் இடம்பெறவுள்ளது.

உடுவில் பிரதேச செயலாளர் திருமதி. பிறேமினி பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8)



முள்ளியவளை பொன்நகர் கிராமத்தில் மாவீரர் நல்லமுத்து நினைவாக புதிதாக விநாயகர் ஆலயம் அமைக்கப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை பொது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

(படம்-சதீஸ்)

## மணிவிழா வாழ்த்து

திருமதி.

**யூலி ஆன் தயாகரன்**

**BA Dip in Edu(SLTS-1)**

எமது பாடசாலையில் சமூகவிஞ்ஞானபாட ஆசிரியராக சேவையாற்றி 06.02.2026 இன்று தனது அறுபதாவது அகவையில் ஓய்வு பெற்றுச்செல்லும் திருமதி யூலி ஆன் தயாகரன் அவர்களது ஓய்வுக்காலம் குடும்பத்துடன் என்றும் சிறக்க மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

"நிலையான வாழ்வு
நீடு நிலைத்து என்றும்
நீடுபுகழ் செறிவாக
மலர நிதம்
சிந்தையால் வாழ்த்துகின்றோம்"

BEST WISHES



(6748)

வாழ்த்துவோர் : ஆசிரியர் நலன்புரிக்கழகம்,யா/சன்மார்க்க ம.வி

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு யாழ்.விஷன் இந்து மன்றத்தின் அருள்மிகு விசாலாட்சி சமேத காசிவிஸ்வநாதர் ஆலய அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்த திருவிழாவும் அன்று மாலை கொடியிறக்கமும் இடம்பெறும்.

17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கல்யாணமும் 18 ஆம் திகதி புதன்கிழமை வைரவர் மடையும் இடம்பெறும் என ஆலய தர்மகர்த்தாக்கள் அறிவித்துள்ளனர். (8)

## மின்விளக்குகள் இன்மையால் மந்திகை பகுதி மக்கள் அவதி

(கரணவாய்)

பருத்தித்துறை மந்திகைப் பகுதியில் உள்ள சந்திகளில் போதிய வெளிச்சமின்மையால் இரவு நேரங்களில் பயணிப்போர் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மந்திகையில் உள்ள புலோலி பாடசாலை சந்தி, சிலையடி சந்தி, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சந்தி, மந்திகை நாற் சந்தி என்பவற்றில் மின்குமிழ்கள் இன்மையால் இரவு நேரங்களில் வைத்தியசாலைக்கு வரும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன் விபத்துக்களையும் சந்திக்கின்றனர்.

இது தவிர சந்தை ஒழுங்கை, சாவகச்சேரி வீதி என்பவற்றிலும் மின் குமிழ்கள் இருக்கின்ற போதிலும் அவை ஒளிராத நிலையிலேயே காணப்படுகின்றன.

எனவே இவ் விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (8-60)

## மருதங்கேணி இலங்கை வங்கி கிளை சேவைகள் விஸ்தரிப்பு

(கரணவாய்)

யாழ்,வடமராட்சி கிழக்கு மருதங்கேணி இலங்கை வங்கி கிளையின் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மருதங்கேணி இலங்கை வங்கியின் முகாமையாளர் கருத்து தெரிவிக்கையில்,

07-2-2026 முதல் மருதங்கேணி இலங்கை வங்கிக் கிளையின் சேவைகள் சனிக்கிழமைகளிலும் காலை 08.30 மணியிலிருந்து பிற்பகல் 1:30 மணி வரை வாடிக்கையாளர் நலன் கருதி விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமைகளிலும் அதிகமான வாடிக்கையாளர்கள் வந்து செல்வதால் அவர்களில் பலர் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனை கருத்தில் கொண்டே சனிக்கிழமைகளில் சேவைகள் இவ்வாறு விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (8-60)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3352

**சீலா**

அப்பத்தாக்களின் வளர்ப்பே ஒரு அரிய வரம்



இன்று பலருக்குக் கிடைக்காத மதிப்புமிக்க பொக்கிஷம்

**மேகலா**

ஆசிரியர்:
உலகத்தை முதலில் சுத்தி வந்தது யாரு..?

மாணவன் :
விடுங்க சார்! ஊர சுத்துன வெட்டிப் பயல பத்தி என்ன பேச்சு வேண்டி கிடக்கு..?



**கோகுல்**

உடல்நிலை சரியில்லாதவர்களை சந்திக்கும் போது!



அமெரிக்கர்கள் — சீக்கிரம் உடம்பு சரியாகிடும்.



பிரிட்டிஷர்கள்.! — விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.



இந்தியர்கள்.! — எனக்கு தெரிஞ்சவங்க கூட இதே நோயால தான் இறந்து போயிட்டாங்க.

**கௌதம்**

உன் கல்யாணத்துக்கு உன் ஒரு friends ஒருத்தன் கூட வரல ஏன்டா...?



அதான் சொன்னனே... எனக்கு ஒரு கஷ்டம்னா யாரும் வர மாட்டாங்கன்னு..

**மகிஷன்**

திங்கட்கிழமை காலையில் யார் ஜாலியா கிளம்பி வேலைக்கு போகிறார்களோ



அவர்கள்தான் நிம்மதியான வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்று அர்த்தம்

**மரியா**


அப்பா இத தட்டி தட்டி தான் மாசம் 50000 சம்பாதிக்கிறாரு..



எனக்கு ஒரு 5000 கூடவா தர மாட்டாங்க...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# குப்பி
# சொக்கவளவு சோதி விநா
# புனராவர்த்தன பிரதிஷ்டா அஷ்ட
# மஹாகும்பாபிஷே

## ஆலய பிரதம குருவின் ஆசியுரை



சொக்கவளவு சோதி விநாயகப்பெருமாள் மகா கும்பாபிஷேகம் காண்பதை எண்ணி பெருமிதம் கொள்வதோடு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

சைவ சித்தாந்த சிகாமணி காசிவாசி செந்திநாதையர் பூசித்த சொக்கவளவு சோதி விநாயகப் பெருமானை 1998 ஆம் ஆண்டு முதல் இன்று வரை அர்ச்சிப்பதோடு 1999 ஆம் ஆண்டு முதலாவது கும்பாபிஷேகத்தையும், 2012 ஆம் ஆண்டு இரண்டாவது கும்பாபிஷேகத்தையும் மற்றும் 2026 ஆம் ஆண்டு மூன்றாவது கும்பாபிஷேகத்தையும் தலைமை ஏற்று நடாத்துவதற்கு விநாயகப்பெருமாள் அருள் புரிந்ததை இட்டு பெரும் பேறாக எண்ணி மன மகிழ்வு அடைகிறேன்.

அருள் ஞான வள்ளலாகிய சோதிவிநாயகப் பெருமாள் குப்பிழானூர் மக்கள் உட்பட மண்ணுலகத்துப் பிறவிகள் அனைத்தும் உய்தி பெறுக என்று பிரார்த்திப்பதோடு ஆசி கூறி அமைகிறோம்.

**ஆலய பிரதமகுரு, ஆகம பிரதிஷ்டா வித்வஜோதி,**
**கிரியாகலாபமணி,**
**சிவஸ்ரீ.சிதம்பர.கிருஷ்ணசாமிக் குருக்கள்**


## வாழ்த்துச் செய்தி



வடபுல யாழ்ப்பாணத்தின் குப்பிழான் மண்ணில் அமைந்திருக்கும் சொக்கவளவு சோதிவிநாயகர் தேவஸ்தானம் மஹா கும்பாபிஷேகம் காண்கிறது எனும் செய்தி அடியவர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும். ஒவ்வோர் கிராமத்திலும் அமைந்துள்ள ஆலயங்கள் அவ்வவ்பகுதி மக்களுக்கு அமைதியைத் தந்து ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிகோலுபவை ஆகும். அவ்வகைத் திருத்தலங்கள் தமது மகோற்சவ காலத்தில் அடியார்களை ஒன்று திரளச் செய்து அவர்களுக்குரிய உத்வேகத்தையும், உற்சாகத்தையும் அளித்து அவர்களின் சிந்தையை நல்வழிப்படுத்துவனவாக அமைகின்றன அதிலும் பன்னிரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் கும்பாபிஷேகப் பெருவிழா அக் கிராமங்களில் ஆன்மீக பெருக்கை ஏற்படுத்தி அடியார்களின் உளம் நிறையச் செய்பவை. அவ்வகையில் குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் தேவஸ்தானத்தில் நிகழவுள்ள கும்பாவிஷேகப் பெருவிழாவானது அப்பகுதி அடியவர்களுக்கு வளமான வாழ்வையும் நிறைவான செல்வத்தையும், குன்றாத ஆரோக்கியத்தையும் வழங்கத் துணைசெய்ய வேண்டுமென வாழ்த்துவதுடன் கும்பாபிஷேகக் கிரியைகளுக்காக அயராது பாடுபடும் அந்தணசிவாச்சாரியார்களுக்கும் ஆலய பரிபாலன சபைக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி.பிரேமினி பொன்னம்பலம்**
**பிரதேச செயலாளர், வலி.தெற்கு பிரதேசசெயலகம் உடுவில்.**

## யாவர்க்கும் சோதி விநாயகன் அருள் கிடைக்கட்டும்



"குப்பிழான் யாழ்.குடா நாட்டில் ஒரு திருப் பரங்குன்றம் போல்வது" என்றார் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை சிவாகம நற்சித்தார்ந்த வாய்மை புகட்டும் திருந்தவை ஒன்று நீண்ட நெடுங்காலமாகவே இங்குண்டு.

மதுரைத் திருவாலவாயின்கண் ஆட்சி புரிந்து வரும் அன்னை மீனாட்சியை "சொக்கி" என்றும் சோமசுந்தரரேஸ்வரரைச் "சொக்கர்" என்றும் கூறுவது தமிழிலக்கிய மரபு. போர்த்தர்களின் சூழ்ச்சி இலங்கையிற் பரவ முன் (இன்றைய) சொக்கவளவில் சிவாலயம் ஒன்று இருந்ததெனச் செவிவழிக்கதை ஒன்று உண்டு. அது "சொக்கி" ஆகிய மீனாட்சியையும் "செந்தமிழ்ச் சொக்கர்" ஆகிய சோமசுந்தரக் கடவுளையும் மூலவர்களாகக் கொண்டிருந்திருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

தினசரி சந்தியாவந்தனம் செய்து அச் சிவலிங்கத்திற்கே ஆத் மார்த்த சிவபூசையும் செய்வது தங்கள் வழக்கம் என்று மரபறிந்த ஊருக்குச் சொந்தமான பிராமண பரம்பரையினர் கூறுகின்றனர்.

குப்பிழானில் ஒரு மதுரைப் பக்தி மரபு நீண்ட காலமாக நிலவி வருவதை அறியக் கூடியதாக உள்ளது. இத்தகு சீர்மிக்க புண்ணியப் பெரும்பதியில் புனருத்தாரணப் பணிகள் நடைபெற்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது மண்ணிற் பிறந்தார் யாவர்க்கும் கிடைத்ததற்கு அரிய பெரும் பேறு ஆகும்.

திரிகரண சுத்தியும் சர்வகாரிய சித்தியும் பெற்று இப் பெருஞ்சாந்தி காண்போர் யாவரும் இன்புற்று வாழ் "சோதியாய்த் தோன்றும் உருவினர்" ஆய பெருமான் அநுக்கிரகிப்பாராக!

**கலாநிதி சைவப் புலவர். ஏ.அனுசாந்தன்.**

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



யாழ் நகரிலே பிரசித்தி பெற்று விளங்குகின்ற விநாயகர் ஆலயங்களிலே குப்பிழான் சொக்கவளவு சோதி விநாயகர் தேவஸ்தானமும் ஒன்றாகும். இவ் ஆலயம் பற்றிய வரலாற்றுத் தகவல்கள் பேணப்பட்டு வருவதானது ஆலயத்தின் பெருமையை மேலும் பறைசாற்றி நிற்கின்றது.

இவ்வாலயத்தின் வரலாறு நாவலர் பெருமானின் கல்விமரபு வழித்தோன்றல் காசிவாசி செந்திநாத ஐயரின் முறைச் சந்ததியினர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலத்திலே தெய்வீக மரங்களின் நடுவே கனிதரும் மரமாகிய பலாமரத்தின் கீழ் மண்ணாலான மடாலயம் அமைத்து கிராம மக்கள் விநாயகப் பெருமானை வழிபட ஆரம்பித்தனர். காலத்தின் தேவை கருதி, விநாயகப் பெருமானின் அருளாசி கை கூட, இன்று இராஜகோபுரம், மணி மண்டபம், வசந்த மண்டபம் என அனைத்து சிறப்புக்களும் அமையப் பெற்ற ஆலயமாக வளர்ச்சியடைந்துள்ளது.

கும்பாபிஷேகங்கள் ஆலய வளர்ச்சியில் ஒரு படித்தளங்களாக அமைகின்றன. அந்த வகையில் பழமையும் பெருமையும் கொண்டு விளங்கும் இவ்வாலயத்தில் இவ்வாண்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவது காலத்தின் தேவையும் விநாயகரின் திருவருளும் ஆகும்.

இவ் மஹாகும்பாபிஷேக விழாவானது விநாயகப் பெருமாளின் அருளாசியுடன் சிறப்புற நடைபெறவும், இதனையொட்டி வெளியிடப்படுகின்ற மஹாகும்பாபிஷேக பத்திரிகை சிறப்பு மலரானது சிறப்பாக வெளிவரவும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்திப்பதுடன், ஆலய ஆதீன கர்த்தாவுக்கும் திருப்பணிச் சபையினருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**ம.பிரதீபன்**
**அரசாங்க அதிபர்,யாழ்ப்பாண மாவட்டம்**

## வாழ்த்துச் செய்தி




திருமூலர் அவர்களினால் 'சிவபூமி' எனச் சிறப்பித்துக் கூறப்படும் எமது ஈழவள நாட்டில் விநாயகர் வழிபாடும் மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது. இந் நாட்டின் மகுடம் எனத் துலங்கும் யாழ்.மாவட்டத்தில் குப்பிழான் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலயம் மிகத் தொன்மை வாய்ந்ததாகும். தும்பிக்கையானை நம்பிக்கையுடன் தொழுதால் நமக்கு வேண்டியன யாவும் வேண்டியவாறே கிடைக்கும் என்பது முற்றிலும் உண்மையானதாகும்.

போராட்டம் இங்கு நடைபெற்ற காலங்களில் இவ் ஆலயத்தை சூழவுள்ள பகுதிகளில் மக்கள் குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் பலர் புலம்பெயர்ந்து வாழும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டனர். அத்தகைய இக்கட்டான சூழலிலும் தம் மொழி, மதம் இவற்றினைக் கண்ணாக கருதி கலாசார பண்பாடுகளைக் காக்கும் மக்கள் உள்ளூரில் இருந்தும் புலம்பெயர் தேசங்களில் இருந்தும் வழங்கிய நிதி உதவிகளின் மூலம் விநாயகனின் ஆலயத்தின் புனிதத்தத்துவத்தைப் பேணி ஆகம விதிக்கமைய பூசைகளும் செய்து வருகின்றனர்.

சமய விழாக்கள் சமயத்தின் தத்துவ உண்மைகளையும் அறிவியல் வெளிப்பாடுகளையும் எடுத்துக் காட்டுகின்றன. அவற்றுள் கும்பாபிஷேகம் என்பது தெய்வத்தின் சக்தியைப் புதுப்பிக்கும் ஒரு நிகழ்வாகும். 12 வருடங்களுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் செய்யப்பட வேண்டும் என ஆகமங்கள் வெளிப்படுத்துகின்றன.அத்தகைய கும்பாபிஷேக விழாவில் ஆசார சீலர்களாக கலந்து கொண்டு ஆனைமுகனின் திருவருளை நாம் அனைவரும் பெற்று உய்வோமாக!

**திரு. பா. கஜநாதன்**
**தலைவர், ஆலய பரிபாலன சபை.**

## மஹா கும்பாபிஷேக வாழ்த்துச் செய்தி




குப்பிழான் சொக்கவளவு சோதி விநாயகர் தேவஸ்தானம்

நல்லைநகர் நாவலரின் கல்வி மரபு வழித்தோன்றல் காசிவாசி செந்திநாத ஐயரின் முறை சந்ததியினர் காலத்தில் ஆரம்பமாகி படிப்படியாக சிறப்பாக வளர்ச்சி அடைந்து இன்று மஹா கும்பாபிஷேகம் இடம்பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.சைவ தர்மநெறி தவறாது வாழும் குப்பிழான் குடியினருக்கு அனைத்து விடயங்களிலும் உறுதுணையாய் நின்று அவர்களைப் பக்தி வசப்படுத்தி ஈற்றிலே முத்தியை அருள் வதற்கு ஆலயமே அவசியம்.

எனவே "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற எமது முன்னோர்கள் கூறிச்சென்ற வாக்கிற்கு அமைய சித்தியும் புத்தியும் தந்து எம்மைப் பக்தி வசப்படுத்தி ஈற்றிலே முத்தியை அருளவல்ல வித்தகப் பெருமான் விநாயகரின் திருவடித் துணைகொண்டு இம் மஹாகும்பாபிஷேகப் பத்திரிகை சிறப்பு மலர் வெளிவருவது விநாயகரின் திருவருட் கடாட்சமே எனக்கூறி இவ் ஆலயம் மேலும் சிறப்புக்களுடனும் புதுப் பொலிவுடனும் விளங்கிட திருப்பணிகள் பல தொடர்ச்சியாக செய்து மக்கள் அனைவரும் சொக்கவளவு சோதி விநாயகர் அருளாலே நிறைந்து அவன் திருத்தாள்களை வணங்கிட வாழ்த்துகின்றேன்.

**இ.ரமேஷ்**
**கிராம உத்தியோகத்தர்**
**J/211 குப்பிழான் வடக்கு.**



## குப்பிழான் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலய வரலாற்றுச் சுருக்கம்.

ஈழ மணித்திருநாட்டில் வடபால் விளங்கும் யாழ் மாவட்டத்தில் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் சைவத்தமிழ்ப்பண்பாடுகளை நிறைவாகக் கொண்டுள்ள கிராமமாக குப்பிழான் விளங்குகிறது.

இங்கு வாழ்பவர்களின் விக்னங்கள் போக்கும் கடவுளாக சொக்கவளவு சோதி விநாயகன் விளங்குகின்றான்.

இவ் ஆலய வரலாறு நல்லை நகர் நாவலர் பெருமானின் வழித்தோன்றல் காசிவாசி செந்திநாதையரின் முறை சந்ததியினர் காலத்தில் ஆரம்பமாகின்றது.

ஆரம்பத்தில் இவ்வாலயம் அமைந்த இடம் தெய்வீக விருட்சங்கள் நிறைந்த வனமாக விளங்கியது. இவற்றில் நடுவே கனி தரு மரமாகிய பலா மரத்தின் கீழ் விநாயகப் பெருமானுக்கு மண்ணாலாகிய மடாலயம் அமைத்து பூசித்து வந்தனர்.

இவ்ஆலயத்தை சூழ பண்பில் உயர்ந்த சைவத் தமிழ்ப் பண்பில் குடிகளும், வேத சிவாகமங்களைக் கற்றுணர்ந்த அந்தணர்களும் வாழ்ந்தனர்.

அக்காலத்தில் இங்கு திண்ணைப்பள்ளிகள் அமைத்து ஊரறிஞர்கள் சைவத்தையும் தமிழையும் போதித்தனர்.

இவர்களுள் காசிவாசி செந்திநாதையர் முக்கியம் வாய்ந்தவர்.

ஆரம்பத்தில் இவ்வாலயம் சொக்கவளவு கற்பக விநாயகர் ஆலயம் என வழங்கப்பட்டது. மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது என்பதற்கமைய இச்சிறு ஆலய விநாயகர் பேரருளை வழங்கி வந்தார்.

கற்பக விநாயகரின் திருவருளை உணர்ந்த காலம் சென்ற பொன்னையா குடும்பம், சுந்தரசர்மா குடும்பம், மாந்திரீக வைத்தியர் சிதம்பர நாத ஐயர்( தடி ஐயர்) குடும்பம் முதலானவர்கள் ஆலய அருகில் குடியமர்ந்து விநாயகரைப் பூசித்து வந்தனர்.

ஆரம்பத்தில் ஆலய பூசைக் கருமங்களை சி.பொன்னையரும், அவரது சந்ததியினரும் சிறப்புற ஆற்றினர். ஆரம்பத்தில் 25 பேர் கொண்ட தர்மகர்த்தா சபை உருவாக்கப்பட்டது. 1927 ஆம் ஆண்டின் இறுதியில் இவர்களால் அமைக்கப்பட்ட தென்னங் கீற்றிலான கூரையும் கற்சுவரும் கொண்ட மடாலயம் புதுப்பொலிவு பெற்றது. விநாயகர் பக்தரான சுந்தர சர்மாவின் முகதாவில் ஆசிரியர் வைத்தியர் சுப்பையாவை தர்மகர்த்தாவாகவும், சட்டத்தரணி வைத்திலிங்கம் தம்பிராசாவை தலைவராகவும் கொண்டு மேற்படி 25 பேர் கொண்ட தர்மகர்த்தா சபை ஆலய அபிவிருத்திக்காக தீவிரமாக செயற்பட்டது.

தொடர்ந்து வந்த காலத்தில் எம் பெருமானுக்கு கற்கோவில் அமைக்கப்பட்டு திருமஞ்சனக்கிணறும் கட்டப்பட்டு 1940 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகமும் ஆலய அர்ச்சகர் பொன்னையா சுந்தர சர்மா

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

பழமையும் பெருமையும் வாய்ந்த சொக்கவளவு சோதி விநாயகர் ஆலயமானது குப்பிழான் பதியிலே அமையப் பெற்று எல்லாம் வல்ல ஆனைமுகப் பெருமான் அடியவர்களுக்கு அருள்பாலித்து வருகின்றார்.


அவரின் அருள் ஆசியால் இவ் ஊர் மக்கள் எல்லோர் வாழ்விலும் நன்மை, அமைதி , ஆரோக்கியம், வளம் என்பன நிறைவாகக் கிடைத்து வருகின்றது.

இப் புனித ஆலயம் இறைவனின் அருளால் மஹா கும்பாபிஷேகம் காணும் இந் நாளில் இறைவனின் அருள்கிட்டி மக்கள் சமுதாய ஒற்றுமையுடன் ஆரோக்கியமாக வாழ என் வாழ்த்துக்களையும் ஆசியையும் வழங்குகின்றேன்.

**திரு. சி.சிவகுமாரன், (இ.அ.சே. I)**
**அதிபர்**
**யா/வலி/குப்பிழான் விக்கினேஷ்வரா மகா வித்தியாலயம், ஏழாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழான்
# ாயகர் தேவஸ்தானம்
# டபந்தன உத்தம நவகுண்டபக்ஷ
# ஷக விஞ்ஞாபனம்-2026



அவர்களின் தலைமையில் ஊரெழு சிவஸ்ரீ ச.சோமசுந்தரக் குருக்கள் அவர்களால் இனிது நிறைவேற்றப்பட்டது. 12.02.1940 இல் தர்மகர்த்தா சபை பரிபாலன சபையாக பொதுமை பெற்றது. சுந்தர சர்மா ஐயாவின் காலத்தில் கோணேஸ்வரப் பெருமான் எழுந்தருளி வடபால் வந்தவேளை இவ்வாலயத்திற்கு எழுந்தருளிய சிறப்புண்டு. அந்நாள் தொடக்கம் கற்பக விநாயகப்பெருமான் சோதி விநாயகராக சுந்தர சர்மா ஐயாவிற்கு தென்பட்டமையால் சோதிவிநாயகர் என்ற நாமம் உருவெடுத்தாக அறியப்படுகின்றது.

1953- 1956 வரை தையிட்டியைச் சேர்ந்த பொன்னையா சிவசாமிக் குருக்களும் 1957 இலிருந்து விஷ்வநாத ஐயர் , சுப்ரமணிய ஐயர் என்போரும் பூசகராக கடமையாற்றினார்கள்.

1962 ஆம் ஆண்டு இணுவில் இராமநாதக்குருக்கள் தலைமையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து ஆலயம் வளர்ச்சி பெற்று 1976 ஆம் ஆண்டு அரியாலை சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்களால் நிறைவேற்றப்பட்டது.அவரே ஆலய அர்ச்சகராகவும் இருந்து பணிகள் செய்தார்.அதன் பின்பு 1999 ஆம்ஆண்டு முதல் கிரியாகலாபமணி பிரம்மஸ்ரீ சிதம்பர கிருஷ்ண சாமிக்குருக்கள் அவர்கள் இன்று வரை ஆலய பிரதம குருவாக இருந்து பணியாற்றுகின்றார்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் பல இன்னல்கள் ஏற்பட்ட போதும் மீண்டும் ஆலயம் புனரமைப்பு செய்யப்பட்டு 01.07.1999 இல் ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ. சிதம்பர கிருஷ்ண சாமிக்குருக்களால் மஹாகும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து ஆலயத்தில் இராஜகோபுரம் அமைக்கப்பட்டு மேற்படி குருக்களால் 11.06.2018 இல் இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இவ்வாலயத்தின் ஆதி கர்த்தாவாகிய சித்தாந்த ஞான பான காசிவாசி செந்தில்நாதையரின் உருவச்சிலை சிற்பி சிவப்பிரகாசம் அவர்களினால் வடிவமைக்கப்பட்டு 28.08.1983 இல் பேராசிரியர் சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இவ் உருவம் எமதுஆலய முன்றலில் அமைந்திருப்பது எமக்கு கிடைத்த நற்பேறாகும்இவ்வாலயத்தில் உற்சவங்களுக்கு குறைவில்லை. 12 மாதங்களிலும் பல்வேறு உற்சவங்கள் நடைபெறுகின்றன. வளர்பிறை , தேய்பிறை சதுர்த்தி மகாசிவராத்திரி, ஆனி மாத மகோற்சவம், நவராத்திரி , பிள்ளையார் கதை, திருவெம்பாவை எனப் பலவற்றாலும் சோதி விநாயகன் திருவருள் நிறைந்த வண்ணம் உள்ளது. இவ் உபயங்களை நிறைவேற்றுகின்ற உபயகாரர்கள் எம்பெருமானின் திருவருளுக்கு பாத்திரமானவர்கள்.

திருவும் கல்வியும் சீரும் தழைத்து தீமைகள் நீங்கி இன்பம் பெருகி இவ் உலகில் எல்லோரும் இன்புற்று வாழ சொக்கவளவு சோதி விநாயகனைப் போற்றுவோம்.

## பொருளாளரின் உள்ளத்திலிருந்து...



குப்பிழான் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலயம் தொன்மையும் சிறப்பும் வாய்ந்த ஒன்றாகும். இக் கிராமத்தின் சைவத் தமிழ்க் கலாசார மேம்பாட்டில் இவ்வாலயம் முக்கிய பங்கு வகிக்கின்றது.எம்பெருமானின் திருவருளும், பிரதம குருவின் குருவருளும் பரிபாலன சபையினர், தொண்டர்கள், அடியவர்களின் பங்களிப்பும் எமது ஆலய மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றது.எங்கள் பலரின் உழைப்பின் பயனாக இன்று மஹாகும்பாபிஷேக நிகழ்வு நடைபெறுகின்றது. இதில் கலந்து கொள்வது எமக்கு கிடைத்த பெரும்பேறாகும்.இவ்வாலயம் புதுப்பொழிவு பெறுவதற்கு பூரண ஒத்துழைப்பை நல்கிய குருமார்கள், கட்டடக் கலைஞர்கள், சிற்பாசாரியர்கள், ஓவியர்கள், ஆசாரியார்கள், மின்தொழில்நுட்பவியலாளர்கள், பரிபாலன சபையினர், தொண்டர்கள், அனைவருக்கும் உணர்வுபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ.ராகுலன்**
**பொருளாளர், ஆலய பரிபாலன சபை.**

## "வித்தக விநாயக விரை கழல் சரணே"



குப்பிழான் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலயத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகுந்த ஆனந்தமடைகிறேன். சைவமும் தமிழும் காத்த புண்ணிய சீலர்கள் பலர் பிறந்த திருவூர் குப்பிழான். இத்திருவூரில் எழுந்தருளி அருள்பாலிக்கும் சோதி விநாயகர் பெருமையை யாம் அறி வோம். இத்திருத்தலப் பெருமை பற்றி மாதாஜி விசாலாச்சி அம்மையார் அவர்கள் பல சிறப்புச் செய்யுள்கள் பாடியுள்ளார். பக்தர்களின் நிறைந்த ஆர்வமும் பரிபாலன சபையின் முயற்சியும் ஆலயம் புதுப் பொலிவு பெற்றுள்ளது.

மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று எம் சமூகம் சீரோடும் சிறப்போடும் வாழப் பிரார்த்தித்து, விநாயகப் பெருமான் அடியார்கள் அனைவருக்கும் நல்லாசிகளைத் தெரிவித்து அமைகிறேன்.

**செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன்**
**(தலைவர், தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்), (தலைவர்,சிவபூமி அறக்கட்டளை,இலங்கை)**

## வலி.தெற்கு தவிசாளரின் வாழ்த்துச் செய்தி



குப்பிழான் கிராமம் எமது வலிகாமம் தெற்கு பிரதேசத்திலுள்ள மிகவும் பாரம்பரிய பண்பாட்டை கொண்டமைந்த கிராமம். சைவம், தமிழ் இரண்டையும் இரு கண்ணெனப் போற்றிக் கொள்ளும் நன்மக்களைக் கொண்ட வளம்மிக்க கிராமம்.

இத்தகைய சிறப்பு பொருந்திய தேசத்தில் "சொக்கவளவு சோதி விநாயகர் ஆலயம்" இன்று குடமுழுக்குக் காண விருப்பதையிட்டு மிகவும் மனமகிழ்வு கொள்கின்றேன்.

பொதுவாக ஆலயங்கள் எமது சைவப்பண்பாட்டையும், கலாசாரத்தையும் சகல கலைகளையும் தெய்வீக தன்மையுடன் வளர்க்கின்றது என்பதே நிதர்சனமான உண்மை. அந்த வகையில் "சொக்கவளவு சோதி விநாயகர் ஆலயம்" கோயில் கொண்டுள்ள கிராமத்தையும், மக்களையும் தெய்வீகத் தன்மையுடனும், ஒற்றுமையுடனும், அறநெறி வாழ்க்கை பாரம்பரியத்துடன், கலை கலாசாரத்துடனும் நிச்சயம் விநாயகர் இக் கிராமத்தை மிளிரவைப்பார்.

முன்னோர்கள் மிகப் பொருத்தமான வகையில் இந்தக் கோயிலை ஸ்தாபித்து பின் மெருகூட்டி இன்று கும்பாபிஷேகம் செய்வது சிறப்பு.எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருளாசி யாவர்க்கும் கிடைக்க வேண்டும் என வேண்டி அனைத்து கும்பாபிஷேக காரியங்களும் சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.

**தி.பிரகாஷ்**
**தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை.**

## வினைதீர்க்கும் விநாயகன்



சைவமும், தமிழும் மேன்மை பெற்று விளங்கும் குப்பிழான் கிராமத்தில் கோவில் கொண்டு எழுந்தருளி எமக்கெல்லாம் நல்லருள் நல்குகின்ற சொக்கவளவு சோதி விநாயகப் பெருமான் பலநூற்றாண்டுகளாக எம்மக்களின் வாழ்வியலோடு இணைந்திருக்கிறார். தஞ்சமென ஒரு தரம் அழைத்தால் எமை நோக்கி வந்து எம்மிடர் களைபவன். திருவும் கல்வியும் சீரும் தழைக்க நல்லருள் புரிபவன்.

ஆலய பரிபாலன சபையினரின் அயராத முயற்சியால் ஆலயத்தில் இன்று பல்வேறு திருப்பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன.ஆலயம் முன்னரிலும் விசாலமடைந்திருக்கின்றது எழில் பெற்றிருக்கின்றது. இத் தெய்வீகப் பணியில் ஈடுபட்ட ஆலயபரிபாலனசபையினர், தொண்டர்கள், அடியவர்கள், உள்நாட்டு வெளிநாட்டு அன்பர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு எம்பெருமானின் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என வேண்டுகின்றோம்.

**தம்பிஐயா கணேசநாதன்**
**சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்( ஓய்வு நிலை)**
**வட. மாகாணம்.**

## என் கடன் பணி செய்து கிடப்பதே



ஏழ்கடல் சூழ் இலங்காபுரியில் வட பகுதியில் யாழ்ப்பாணத்தில் பனை, தென்னை, மா, பலா, வாழை போன்ற பயன் தரும் மரங்கள் செழித்து ஓங்கும், சிவந்த மண் வாசனையும் சைவமும் தமிழும் சிறப்புற்று விளங்கும் கிராமமே "குப்பிழான்" எனும் அழகிய கிராமமாகும். இக் கிராமத்தில் பல சைவ ஆலயங்கள் எழுந்தருளி இருக்கின்ற போதிலும், மூர்த்தி சிறிதாகவும் கீர்த்தி பெரிதாகவும் விளங்கும் ஆலயமாகச் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலயம் திகழ்கிறது.

இவ்வகையில் கடந்த 2012 ஆம் வருடம் எம்பெருமானுக்கு மஹாகும்பாபிஷேகம் இடம்பெற்றது.

தற்போதைய பரிபாலன சபையினர் எடுத்த பெரு முயற்சியால் கொடித்தம்பம், வசந்தமண்டபம், யாகசாலை, உள் மண்ட பம் ஆகியவை புதுப்பிக்கப்பட்டு ஆலயம் அழகாக காட்சி அளிக்கின்றது. அந்த வகையில் இன்றையதினம்(06-02-2026) மஹா கும்பாபிஷேகம் எனும் பெரும் சாந்தி விழா நடைபெற திருவருள்பாலித்து இருப்பது எங்களுக்கு மன நிறைவையும், புலகாங்கிதத்தையும் கொடுக்கின்றது. இவ் வகையில் இன்றைய ஆலய பரிபாலன சபையினர் வாழ்த்துதற் குரியவர்களே.

**க. சிவகுமார்,**
**முன்னாள் ஆலய பரிபாலன சபை தலைவர்.**

## ஆளுநரின் வாழ்த்துச் செய்தி



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ் மாவட்டத்தின், குப்பிழான் பகுதியில் அமர்ந்திருந்து, அருள்பாலிக்கும் விநாயகப் பெருமானுக்கு மஹாகும்பாபிஷேகம் இடம் பெறத் திருவருள் கைகூடியமை குப்பிழான் பிரதேச மக்கள் செய்த தவப்பயனாகும். நித்திய, நைமித்திய பூஜைகள், கிரியைகள், மஹோற்சவங்கள், அபிஷேகங்களை குறைவின்றிக் காணும் குப்பிழான் சொக்கவளவு சோதி விநாயகர், அன்பர்களுக்கு வரங்களை அள்ளிவழங்குபவராக வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார்.

பூரணமான மஹா கும்பாபிஷேகம் ஐம்பத்தைந்து கிரியைகளைக் கொண்டதாக ஆகமங்கள் விபரிக்கின்றன. இத்தகைய பாரிய முயற்சியாகிய கும்பாபிஷேகம் பல ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுவதனால் அதனைப் பார்ப்பது, அதில் பங்கேற்று சேவை செய்வது பெரும் புண்ணியமாகக் கருதப்படுகின்றது. மிக்க ஈடுபாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் கும்பாபிஷேக நிகழ்வுகளில் கலந்து பங்காற்றுபவர்களுக்கு எல்லா நன்மைகளும் வந்து சேரும் என்று ஆகமங்கள் உறுதி செய்கின்றன.

இந்த வகையில் பல்வேறு சிறப்புக்களுடனும் அந்தண சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் ஒலிக்க, மஹா கும்பாபிஷேக விழாவினைக் காணும் அருள்மிகு குப்பிழான் சொக்கவளவு சோதி விநாயகரின் திருவருள் குப்பிழான் வாழ் மக்களுக்கு மட்டுமல்லாது உலகெங்கும் பரந்து வாழும் தமிழ்பேசும் மக்களுக்கும் கிடைக்க வேண்டிக் கொள்வதுடன் அனைவருக்கும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நாகலிங்கம் வேதநாயகன்**
**ஆளுநர், வடக்கு மாகாணம்.**

## செயலாளரின் உள்ளத்திலிருந்து



செம்மண் கிராமம் எனப் போற்றப்படும் குப்பிழான் பதியிலே ஆலயங்களுக்குக் குறைவில்லை. இக் கிராமத்தின் சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணுகின்ற ஆன்மீக நிலையங்களாக ஆலயங்கள் விளங்குகின்றன.

அவற்றுள் ஒன்றாக எமது சொக்கவளவு சோதி விநாயகர் ஆலயம் சிறப்புப் பெறுகின்றது. இவ்வாலயம் நீண்டகாலப் பழமை வாய்ந்தது, தெய்வீக அருள் நிறைந்தது.

விநாயகப் பெருமானின் திருவருளும் காசிவாசி செந்திநாதையரின் குருவருளும் பலம் பெற்று இச் சந்நிதியில் வந்து இம்மை மறுமைப் பயன்கள் பெற்றோர் எண்ணிலர். விநாயகப் பெருமானின் உள்நாட்டு, வெளிநாட்டு அடியவர்களின் நிதிப் பங்களிப்புடன், பலகோடி ரூபா செலவில் ஆலயத்தைப் புதுப்பொழிவு பெறச் செய்துள்ளோம்.அடியவர்கள் பலரின் கூட்டுமுயற்சியாக, கூட்டுப் பொறுப்பாக உழைத்த உழைப்பின் பயனாக இன்றைய இந்த மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

"பெருஞ்சாந்தி காணாதே போதியோ?
பூம்பாவாய்" எனச் சம்மந்தர் குறிப்பிட்டது போல

இந்தக் கும்பாபிஷேகத்தைக் காணும்பேறு எமக்கு கிடைத்தமை எமது தவப்பயனாகும். "அவனருளாலே அவன் தாழ் வணங்கி" என்பதற்கமைய இத் தெய்வீக கைங்கரியத்தில் எம்மோடிணைந்து பயணித்து ஆக்கமும் ஊக்கமும் நல்கிய பெரியோர்கள், பெருந்தொண்டு புரிந்த அருந்தொண்டர்கள், நிதியுதவி, பொருளுதவி புரிந்த அன்பர்கள், இரவு பகல் பாராது பாடுபட்ட ஆலய பரிபாலன சபையினர் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு சோதி விநாயகனின் திருவருள் அனைவருக்கும் நிறைவாகக் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

**பொன். சந்திரவேல்**
**செயலாளர், ஆலய பரிபாலன சபை.**

(C-4949)

மலர்த் தொகுப்பு
சைவப்புலவர், பொன்.சந்திரவேல் (JP) செயலாளர், ஆலய பரிபாலனசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரி மாத இராசி பலன்கள்

## பயணங்கள் செல்ல நேரிடலாம்!



**கிரகநிலை** - இராசியில் குரு(வ) - தைரிய வீரிய ஸ்தானத்தில் கேது - அஷ்டம ஆயுள் ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - பாக்கிய ஸ்தானத்தில் புதன், சனி, ராகு என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** எதிலும் நிதானமாக முடிவெடுக்கும் திறமை உடைய மிதுன இராசி அன்பர்களே! இந்த மாதம் இராசிநாதன் புதன் பாக்கிய ஸ்தானத்தில் பாதசார சஞ்சாரம் உங்களுக்கு சாதகமான அமைப்பைக் காட்டுகிறது. பயணங்கள் செல்ல நேரிடலாம். மனத்திருப்தியுடன் செயலாற்றுவீர்கள். புத்திசாதூரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்புக்கூடும், பாராட்டுக் கிடைக்கும்.

உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். புதிய ஓடர்கள் கிடைக்கக் கூடிய சூழ்நிலை காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உற்சாகமாக செயற்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள். புதிய பதவி அல்லது பொறுப்புகள் கிடைக்கும். குடும்பத்துடன் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் சூழ்நிலை வரும்.

குழந்தைகள் உற்சாகமாகக் காணப்படுவார்கள். பெண்கள் மனதிருப்தியுடன் காரியங்களை செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். பயணம் செல்ல நேரலாம். அரசியல்வாதிகள் கட்சித் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவார்கள். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை.

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் ஏதாவது ஒரு விடயத்தைப் பெரிதாக பேசுவார்கள். கணவன் மனைவிக்கு இடையே நிதானமான போக்கு காணப்படும். பிள்ளைகளின் கருத்தை அறிந்து அதற்கேற்ப செயற்படுவது நன்மை தரும். மூத்த சகோதரர் உடல்நலத்தில் கவனம் தேவை. பொருளாதார நிலை முன்னேற்றம் அடையும்.




**திருவாதிரை:** இந்த மாதம் மனக்குழப்பம் ஏற்பட்டு நீங்கும். திட்டமிட்டு செயற்படுவது காரிய வெற்றிக்கு உதவும். மாணவர்களுக்குக் கூடுதலாக பொறுப்புகள் சேரும். கல்வியில் நாட்டம் அதிகரிக்கும். கவனமாகப் படிப்பது நல்லது. எதிலும் எச்சரிக்கை தேவை. காரியத் தடை, தாமதம் வரலாம். எனினும் உடன் பணிபுரிபவர்களிடம் எச்சரிக்கையாக இருப்பது சிறந்தது. உங்களின் ஆர்வமும் அக்கறையும் மற்றவரை பிரமிப்படைய வைக்கும்.

**புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் குடும்ப பிரச்சினை தீரும். ஒரு முறைக்கு பலமுறை எதையும் ஆராய்ந்து பார்த்து செய்வது நன்மை தரும். பணவரவு உண்டு. ஆனால் வீண் செலவும் ஏற்படும்.

சொத்துக்கள் வாங்குவது, விற்பது ஆகியவற்றில் கவனம் தேவை. பயணங்களின் போதும், வாகனங்களில் செல்லும் போதும் எச்சரிக்கை தேவை. முடிக்க வேண்டிய காரியங்களை செவ்வனே செய்வீர்கள். அரசாங்கம் சார்ந்த உதவிகள் எளிதாக கிடைக்கும்.

**பரிகாரம்:** பெருமாளை புதன்கிழமைகளில் அர்ச்சனை செய்து வணங்கத் திருமணத் தடை நீங்கும். குடும்பத்தில் சுபிட்சம் உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, புதன், வியாழன்
**சந்திராஷ்டம தினங்கள்:** 15, 16, 17
**அதிஷ்ட தினங்கள்:** 22, 23

## பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும்!



**கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் கேது - சப்தம ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - அஷ்டம ஸ்தானத்தில் புதன், சனி, ராகு - விரய ஸ்தானத்தில் குரு(வ) என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** கடினமான சூழ்நிலையிலும் தன்னுடைய சாமர்த்தியத்தைப் பயன்படுத்தும் கடக இராசி அன்பர்களே! இந்த மாதம் எடுத்த காரியத்தை எப்படியும் செய்து முடித்துவிடுவீர்கள். சுப செலவுகள் ஏற்படும். வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திட்டமிடுவதில் பின்னடைவு ஏற்படும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். பெரியோர் நேசம் கிடைக்கும். வாகன யோகம் உண்டாகும்.

தொழில் வியாபாரம் வாக்கு வன்மையால் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகலாம். உத்தியோகம் தொடர்பான பயணங்கள் செல்ல நேரலாம். உத்தியோகத்தர்கள் புத்திசாதூரியத்தால் மேல் அதிகாரிகள் கொடுத்த வேலையை சிறப்பாகச் செய்து முடிப்பார்கள். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். கணவன், மனைவிக்கு இடையே இருந்த மன வருத்தம் நீங்கும்.

பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொடுப்பீர்கள். பெண்களுக்குக் காரியங்களில் இருந்த பின்னடைவு நீங்கும். அரசியல்வாதிகளுக்கு தொகுதியில் மதிப்புக்கூடும். கோஷ்டிப் பூசலையும் தாண்டிச் சாதிப்பீர்கள். கலைத்துறையினர் யதார்த்தமான படைப்புகளால் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பார்கள். வேற்றுமொழி வாய்ப்புகளால் புகழடைவார்கள். மாணவர்களுக்கு முன்னேற்றம் காணப்படும்.

**புனர்பூசம் 4ஆம் பாதம்:** இந்த மாதம் மற்றவர்களுக்கு வலிய சென்று உதவுவதால் வீண் விரோதம் ஏற்படும். எதிலும் வெற்றியே கிடைக்கும். நண்பர்கள் உதவி கிடைக்கும். வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வது உங்கள் எதிர்காலத்திற்கு உதவும். கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் தேடி வரும் உங்களுக்கு முன்னேற்றமும், ஆதாயங்களும் கிடைக்கும்.

**பூசம்:** இந்த மாதம் தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய




வேண்டி இருக்கும். எதிர்பார்த்த நிதி வசதி கிடைத்தாலும், திட்டமிட்டதை விட கூடுதல் செலவும் இருக்கும். பணியாளர்களிடம் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரி கூறுவதுபடி நடந்து கொள்வது நன்மை தரும். நிலுவையில் உள்ள பணம் வரலாம். அரசியல்துறையினருக்கு பொதுக் காரியங்களில் ஈடுபடும் போது கவனம் தேவை.

**ஆயிலியம்:** இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்களால் சிறு சிறு பிரச்சினைகள் உண்டாகலாம். குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்திலும், வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியத்திலும் கவனம் தேவை.

கணவன், மனைவிக்கு இடையே இருந்த மனக்கசப்பு மாறும். வேலைப்பளு அதிகரிக்கும் என்றாலும் காரியங்களில் தாமதமான போக்கு காணப்படும். பாராட்டு பெறுவது கடினம். மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டு மறையும்.

**பரிகாரம்:** அருள்மிகு ஆதி பராசக்தி அன்னையை தரிசித்து வருவது உடல் ஆரோக்கியத்தை தரும். எதிர்பார்த்த காரியம் தாமதமாக முடியும். ஆனால் நல்ல பலனை தரும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன், வெள்ளி
**சந்திராஷ்டம தினங்கள்:** 18, 19
**அதிஷ்ட தினங்கள்:** 24, 25

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் கொள்வனவு ஆரம்பம்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் 2025/2026ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட நெல் கொள்வனவானது நெல் சந்தைப் படுத்தல் சபையினரால் கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படுகின்ற களஞ்சிய சாலைகளில் தற்பொழுது சுழற்சி முறையில் கொள்வனவு நடைபெற்று வருவதாக வட மாகாண நெல் சந்தைப்படுத்தல் சபை பதில் முகாமையாளர் தவராசா கஜேந்திரன் தெரிவித் துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 26 ஆம் திகதி தொடக்கம் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது விவசாயிகள் தங்களது நெல்களை நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகளுக்கு கொண்டுவந்து வழங்கி வருகின்றனர்.

நாடு ஒரு கிலோ கிராம் 120ரூபாவாகவும் சம்பா ஒரு கிலோ கிராம் 130 ரூபாவாகவும் ஒரு கிலோ கீரிச்சம்பா ஒரு கிராம் 140இற்கும் கொள்வனவு செய்யப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டதில் இராமநாதபுரம் புளியம்பொக்கணை, கண்டாவளை, முழுங்காவில் போன்ற களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளன . இது ஒரு கிழமையில் இரண்டு நாட்களுக்கு சுழற்சி முறையில் திறக்கப்படும் எனவும் எந்தெந்த களஞ்சிய சாலைகளில் எப்போது வழங்க முடியும் என்பதனை எமது பிராந்திய காரியாலயத்தில் 021 20 60 913 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நெல்லினை விவசாயிகள் வழங்கக் கூடியதாக இருக்கும் என தெரிவித்தார். (8-316)





யா/வேலணை மத்திய கல்லூரியின் சாரணிய வரலாற்றில் முதன்முறையாக வான் சாரணியமானது கடந்த 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கல்லூரியின் அதிபர் வி. இ. ஹஸ்ரன் றோய் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் கலந்து சிறப்பித்தார். நிகழ்வில் உதவி மாவட்ட ஆணையாளர் மற்றும் சாரணத்தலைவர்கள், அயற்பாடசாலை சாரண ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## காணி தொடர்பான மீளாய்வுக் கூட்டம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற காணி தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் காணி தொடர்பான செயற்பாடுகளின் தற்போதைய நிலை தொடர்பில் முக்கியமாக கலந்துரையாடப்பட்டது.

காணிப்பத்திரம் இல்லாதவர்களுக்கான பதிவுகளை மேற்கொள்ளல், அளிக்கைப் பத்திரம் வழங்குதல், "கினிகம" திட்டத்தினூடாக வழங்கப்படவுள்ள உறுதிப்பத்திரங்கள், குத்தகை அடிப்படையிலான காணி வழங்கல், குத்தகையினைப் பெற்றுக்கொள்ளல், சட்டவிரோதமாக அரச காணிகளை கையகப்படுத்தியுள்ளோருக்கான நடவடிக்கைகள் என பல முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (8-299)

# ஐம்பொறிகளை அடக்கல்




முனைவர்
ச.மனோன்மணி

ஐம்பொறிகள் என்ற சொல் மனித உடலிலுள்ள ஐந்து உறுப்புகளையும் உள்ளடக்கியுள்ளது. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் உறுப்புகள் மனிதருக்கு இன்றியமையாதவை. இவை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலன்களையும் உணர்த்துபவை. எனவே, பொறிகளும் புலன்களும் ஒன்றிணைந்து செயற்படும் போது மனிதன் செயற்படுகிறான் என்பது தெளிவாகப் புலப்படுகின்றது. இயற்கை நிலையில் இப் பொறிகளின் இயக்கம் தனித்தும் இணைந்தும் நடைபெறுகிறது.

மெய் எனப்படும் உடல் தட்ப வெப்பநிலைகளாலும் ஏனையவற்றாலும் ஏற்படும் மாற்றங்களை உடனடியாக உணரவல்லது. நிலம், நீர், தீ, காற்று, விண் என்னும் இயற்கையின் பேராற்றல்களை ஐம்பூதங்கள் எனக்குறிப்பிடும் ஒரு வழக்கமுண்டு. இவற்றின் பேராற்றல்களை இன்னமும் மனிதனால் முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே, அவற்றை மனித வலுவுக்கு மேலான பெருவலி படைத்த பூதங்கள் என வரையறை செய்துள்ளனர். இவற்றின் பேராற்றலை ஐம்பொறிகளும் உணர வல்லவை.

பொறிகளில் மெய், உணரும் ஆற்றல் கொண்டது. வாய் பேசும் ஆற்றலுடையது. கண் எல்லாவற்றையும் நோக்கும் ஆற்றல் கொண்டது. மூக்கு நாற்றத்தை உணரவல்லது. செவி எல்லா ஒலிகளையும் கேட்கவல்லது. பொதுவான மனித



## வெள்ளி நற்சிந்தனை 25

வாழ்வியலில் இவற்றின் செயற்பாடு மனித உடலைப் பேணும் இலக்கையுடையது. வாய், உடல் வளர்ச்சிக்குத் தேவையான உணவை உள்வாங்கும். மூக்கு உடலியங்கும் காற்றை உள்வாங்கி வெளிவிடும் அரிய செயலைச் செய்கிறது. கண்பார்வையும் செவிப்புலனும் தொடர்பாடல் கருவிகளாகத் தொழிற்படுகின்றன. வாய் பேச்சாற்றலும் கொண்டிருப்பதால் தொடர்பாடலில் பெரும் பங்கை வகிக்கின்றது. இன்னும் தொடர்பாடல் நிலையில் ஐம்பொறிகளுமே இணைந்து செயற்படுவது இவற்றின் உறுப்பு நிலையான இணைப்பை நன்கு உணர்த்தி நிற்கின்றது.

மனிதனால் இப்பொறிகளை அடக்கவும் முடியும். அவற்றின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தவும் முடியும். எடுத்துக்காட்டாக, வாய் என்னும் பொறி சுவை நோக்கி மேலதிகமாக உணவை உட்கொள்ள நேர்ந்தால் அதைத் தடுக்க முடியும். கண் பார்க்கக் கூடாதவற்றைப் பார்க்க விரும்பும் போது அதைக் கட்டுப்படுத்தமுடியும். செவியும் அத்தகையதே. மூக்கும் இவற்றோடு சேர்த்து தேவையில்லாதவற்றை முகரும் போது அதைத் தடுக்கலாம். ஐம்பொறிகளின் கட்டுப்பாடற்ற நிலையை வாய் மொழியூடாக வெளிப்படுத்தும் நிலையும் உண்டு. மெய்யின் விருப்புகளையும் வாய் மொழியால் வெளிப்படுத்தும் போது அதைக் கட்டுப்படுத்தலாம். பொறிகளை அடக்கி உரிய நெறியிலே செயற்படவைக்கும் ஆற்றலுக்கு ஒரு பயிற்சி தேவை. மனத்தால் இப் பொறிகளைக் கட்டுப்படுத்தலாம்.

ஓரிடத்தில் இருந்து கொண்டு கண்களையும் வாயையும் மூடிச் செவிகளையும் ஒரு நிலைப்படுத்தி, மூச்சையும் வரன்முறைப்படுத்தினால் பொறிகள் அடங்கி நிற்கும். அவற்றின் வெளிப்பாடான புலன்களும் நெறிப்பட்டு நிற்கும். இவ்வாறு இருக்கும் நிலைக்கு ஓர் உவமையை வள்ளுவர் கூறியுள்ளார். ஆமை தன்னுடைய உறுப்பு களான தலையையும் நான்கு கால்களையும் உடலுள் இழுத்து மறைக்கும் ஆற்றலுடையது. அது போல மனிதனும் ஐம்பொறிகளையும் அடக்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

ஐம்பொறிகளையும் அடக்கும் ஆற்றல் ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தும் நிலையை நல்கும். இதனால் மனம் பொறி வழிச் சென்று தீய செயற்பாடுகளைச் செய்யாது. உடல் நலம் நன்கு பேணப்படும். தொடர்பாடலில் பண்பு இணையும். வாயினால் கேடு விளையாது. மெய்யினால் ஒழுக்கம் பிறழாது. கண்ணாலும் செவியாலும் தீமை நேராது. ஐம்பொறிகளையும் ஏற்றவாறு அடக்கி வாழும் பயிற்சி பெற்றவர் மனித விழுமியங்களைச் சீராகக் கடைப்பிடிக்க வல்ல வராவார். இன்று எமது உட லிலுள்ள பொறிகளை விட விஞ்ஞானக் கண்டுபிடிப்பு களால் பல்வேறு செயற்கைப் பொறிகள் உருவாகியுள்ளன. அவை இயற்கையான மனித செயற்பாடுகளைச் செயற் கையாக மாற்றிவிட்டன.

மேலும், ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்திவலு விழக்கச் செய்துவிட்டன. கண்ணுக்குக் கண்ணாடியும் செவிக்கு கேட்கும் கருவியும் பலருக்குத் தேவைப் படுகின்றன. இயற்கையான பேச்சாற்றலை வாய் மறந்து வருகிறது.

இறுவட்டுகளில் செயற்கைப் பேச்சைக் கேட்டுப் பாவனையாகப் பேசும் நிலை உருவாகியுள்ளது. இது குறிப்பாக, இளைய தலைமுறையினரை ஐம்பொறிகளை அடக்க முடியாத நிலைக்குத் தள்ளி யுள்ளது. இந்நிலை மாறா விட்டால் புதிய விஞ்ஞானப் பொறிகள் அவர்களை விரைவில் எந்திர மனிதர்களாக மாற்றி விடும். இயற்கையின் சம நிலையையும் விரைவில் சீர் குலைத்து விடும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா - ஈரான் அணுசக்தி

# பேச்சுவார்த்தை இன்று



(டெஹ்ரான்)

**ஈரானுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான அணுசக்தி பேச்சுவார்த்தை இன்று ஓமானில் நடைபெறும் என்பதை டெஹ்ரானின் வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அரக்சி உறுதிப்படுத்தியுள்ளார்.**

குறித்த பேச்சுவார்த்தைகள் உள்ளூர் நேரப்படி வெள்ளிக்கிழமை (GMT 06:00) மஸ்கட்டில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் என்று அரக்சி அறிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான அணுசக்திப் பேச்சுவார்த்தைகள் காலம் மற்றும் இடம் குறித்த கருத்து வேறுபாடுகளால் கேள்விக் குறியாகியுள்ளதாக முன்னர் வெளியான தகவல்களுக்கு மத்தியில் ஈரான் வெளிவிவகார அமைச்சரின் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

பாலிஸ்டிக் (கண்டம் விட்டு கண்டம் பாயும்) ஏவுகணைகளைப் பயன்படுத்துவதற்கான கட்டுப்பாடுகள் மற்றும் பிராந்தியத்தில் ஈரானின் நட்பு நாடுகளின் ஆயுதங்களை வழங்குதல் ஆகியவை அடங்கும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


கடந்த மாதம் போராட்டக்காரர்கள் மீது ஈரான் நடத்திய வன்முறை அடக்குமுறையைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அரபிக் கடலில் படைகளை குவிக்க உத்தரவிட்டதைத் தொடர்ந்து, டெஹ்ரான் மீது வோஷிங்டன் தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்துள்ள நிலையில், இந்தப் பேச்சுவார்த்தைகள் வந்துள்ளன.

1980 முதல் அதிகாரபூர்வ இராஜதந்திர உறவுகள் இல்லாத இரு நாடுகளுக்கும் இடையே இராஜதந்திரத்தை புதுப்பிக்கும் முயற்சியில் ஈரானிய மற்றும் அமெரிக்க அதிகாரிகள் சந்திப்பது இது முதல் முறை அல்ல.

ஜூன் மாதம், அணுசக்தி ஒப்பந்தம் குறித்து விவாதிக்க அமெரிக்க மற்றும் ஈரானிய அதிகாரிகள் ஓமானின் தலைநகரில் கூடினர்.

ஆனால், இஸ்ரேல் ஈரான் மீது தாக்குதல்களைத் தொடங்கியதால் இந்த செயல்முறை ஸ்தம்பித்தது. பின்னர் அமெரிக்கா சிறிது காலம் போரில் இணைந்தது, பல ஈரானிய அணுசக்தி தளங்களை குண்டு வீசித் தாக்கியமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# கடும் பனியின் தாக்கம்; கடலில் உறைந்த கப்பல்



(போலாந்து)

போலந்தின் க்டான்ஸ்க் துறைமுகத்தில் உறைந்த பனிக்கட்டிகளுடன் பனிக்கட்டி பிரமாண்ட கப்பல் ஒன்று நுழைந்துள்ளது.

கடலின் உறைபனியால் கப்பல் முழுதும் பனியால் மூடிய வண்ணம் காட்சியளித்தது. கடுமையான குளிர்கால வானிலைக்கு மத்தியில், உறைபனியால் மூடப்பட்ட பனிக்கட்டி கப்பல் பார்வையாளர்களை வியப்புக்குள்ளாக்கியது.

குறித்த கப்பலில் 50 தொன் பனிக்கட்டிகள் இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

குளிர்கால நிலையின் பாரிய பாதிப்பினை இது எடுத்துக்காட்டுகின்றது. (நி)

# ஜப்பானில் கடும் பனிப்பொழிவு

## ✶35பேர் பலி ✶400பேர் காயம்



(டோக்கியோ)

ஜப்பானில் பல வாரங்களாக நிலவிவரும் கடும் பனிப்பொழிவினால் குறைந்தது 35 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த பனிப்பொழிவு நிலைமை மேலும் மோசமாவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக கூறப்படுகிறது.

இந்தப் பனிப் பொழிவினால் ஏற்படும் விபத்துக்கள் உள்ளிட்ட காரணங்களால் சுமார் 400 பேர் காயமடைந்துள்ளதாகவும் 126 பேர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

அத்துடன், ஜப்பானின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் பனிப் பொழிவினால் ஏராளமான சொத்துக்கள் சேதமடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. சில பகுதிகளில் பனிப்பொழிவு 2 மீற்றர் உயரத்தை எட்டியுள்ளதாக வும் அந்நாட்டு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (நி)

# சமூக வலைத்தளங்களில் வைரலாகும்

# அம்பானியின் தங்கக் கார்



(டில்லி)

ஆனந்த் அம்பானி மற்றும் ராதிகா மெர்ச்சன்ட் திருமண கொண்டாட்டங்கள் உலகையே வியப்பில் ஆழ்த்திய நிலையில், தற்போது ஆனந்த் அம்பானி வாங்கியுள்ள புதிய சொகுசு கார் சமூக வலைத்தளங்களில் பேசுபொருளாகியுள்ளது. ஆனந்த் அம்பானி தனது கார் சேகரிப்பில் மெர்சிடிஸ் பென்ஸ் எஸ்.கிளாஸ் ரக காரைச் சேர்த்துள்ளார்.

மேலும், சாதாரணமாகவே பல கோடி மதிப்புடைய இந்தக் காரை அவர் முழுவதுமாக தங்க நிறத்தில் மின்னும் வகையில் வடிவமைத்துள்ளார். பார்ப்பதற்கு தங்கம் போலவே ஜொலிக்கும் இந்த கார், சாலையில் செல்லும்போது அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் மிக பிரமாண்டமாக உள்ளது.

இந்தப் பிரத்தியேகமான தங்க நிறக் காரின் விலை மற்றும் அதன் சிறப்பம்சங்கள் மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்தியாவில் இந்த காரின் அடிப்படை விலையே சில கோடிகளைத் தொடும் நிலையில், ஆனந்த் அம்பானி செய்துள்ள தனிப்பயனாக்கப்பட்ட மாற்றங்கள் அதன் விலையை மேலும் பல மடங்காக உயர்த்தியுள்ளது. (நி)

# மொராக்கோவில் கனமழை

# நீரில் மூழ்கிய கிராமங்கள்



(மொராக்கோ)

மொராக்கோவில் கடந்த சில வாரங்களாகக் கனமழை பெய்துவரும் நிலையில், வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

மொராக்கோவில் கனமழையால் வடமேற்கு பகுதிகளில் கடும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. க்சார் எல்-கெபிர் நகரில் 50 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சிடி ஸ்லிமானே மாகாணத்தின் கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ள நிலையில், மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக, க்சார் எல்-கெபிர் நகரில் மட்டும் சுமார் 50 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப் பட்டுள்ளனர்.

சிடி ஸ்லிமானே மாகாணத்தின் பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ள நிலையில், மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்தவனாக இரு, சிறந்ததை வைத்திரு, சிறந்ததை செய்

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அறாவிலைக்கு நெல் வாங்கும் அவலநிலை காண்மினே!

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்கிறார் வள்ளுவர். இந்த உலகில் நிலத்தை உழுது பண்படுத்தி உணவுத் தானியங்களை விளைவிக்கின்ற வேளாண் விவசாயப் பெருமக்களே இவ்வுலகின் கண் வாழும் மானிடர்களுக்கு உண்டி கொடுக்கின்றனர்.

எனவேதான் உழுதுண்டு வாழ்கின்றவர்களைத் தவிர, மற்றையவர்கள் தொழுதுண்டு பின் செல்கின்றனர்.

எனினும் நம் தமிழ் மண்ணில் விவசாயத் தொழில் மெல்ல மெல்ல அருகிப்போவது தான் மிகப் பெரும் துன்பம்.

ஆம், இந்த மண்ணில் உடலை வருத்தி வியர்வை சிந்தி தங்கள் உழைப்பால் உணவுத் தானியங்களை உற்பத்தி செய்த விவசாயிகள் வறுமையில் வாடுகின்ற அவலநிலை ஏற்பட்டுள்ளது.

விதை இனங்களின் உச்சவிலை முதல் செயற்கை உரங்கள், கிருமிநாசினிகள் வரை வெளிநாட்டு பல்தேசியக் கம்பனிகள் எங்கள் விவசாயிகளின் உழைப்பை ஏதோவொரு வகையில் உறிஞ்சிக் கொள்கின்றன.

தவிர, வேலை ஆளுக்கான அதிகரித்த கூலியும் சேர்ந்து விவசாயிகள் பெருநட்டமடைய விவசாயத்தைக் கைவிடுவதைத் தவிர வேறுவழியற்றுப் போனது.

இதையும் கடந்து விவசாய உற்பத்தியாளர்களை வியாபாரிகள் உய்ய விடுவதில்லை.

ஆம், குருதியை வியர்வையாக்கி வெயில், மழை என எல்லாக் கஷ்டங்களையும் தாங்கி வேளாண் விவசாயத்தை செய்தால், அதன் விளைபொருளை மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்து அதிகூடிய விலையில் விற்பனை செய்கின்ற வியாபாரிகளால் எங்கள் விவசாயிகள் நலிந்து போயினர்.

உண்மை. ஒரு விவசாய உற்பத்திப்பொருள் சந்தையில் விற்கப்படுகின்ற விலையில் நான்கு மடங்கு வியாபாரிகளைச் சேர, வெறும் ஒரு மடங்கு மட்டுமே விவசாயியைச் சென்றடைகிறது எனும்போது எங்கள் விவசாயிகளின் நிலைமை எப்படி என்பதை நாம் கூறி யாரும் அறிய வேண்டிய தேவையில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போது நெல் அறுவடை நடந்து கொண்டிருக்கும் இந்நேரத்தில், நெல் வர்த்தகர்கள் விவசாயிகளிடம் அறாவிலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்வதால், வேளாண் செய் விவசாயிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

ஆம், இயற்கை அனர்த்தங்களால் நெற்செய்கை பாதிக்கப்பட்டு நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்திருக்கும் இந்த வேளையில், மிகக் குறைந்த விலைக்கு வர்த்தகர்கள் நெல்லைக் கொள்வனவு செய்கின்றனர் எனில் எங்கள் விவசாயிகள், தலையில் கைவைப்பதைவிட வேறுவழிதான் என்ன?

ஆக, நெல் உற்பத்தியாளர்களைக் காப்பாற்றுகின்ற நடவடிக்கையை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் எங்கள் விவசாயம் அம்போ என்றாகி விடும்.

## 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் 10 இற்கும் குறைவான ஆசிரியர்கள்

### தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

*(கொழும்பு)*

நாடு முழுவதும் 10 இற்கும் குறைவான ஆசிரியர்களைக் கொண்ட 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரச பாடசாலைகள் உள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தரவுகளின் படி நாடு முழுவதும் 10,047 பாடசாலைகள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பாடசாலைகளில் 3,065 பாடசாலைகளில் 10இற்கும் குறைவான ஆசிரியர்களே உள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

அப்பாடசாலைகளுள் ஒரு தேசிய பாடசாலையும் அடங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 1,645 அரச பாடசாலைகளில் 50 இற்கும் குறைவான மாணவர்களே உள்ளதாகவும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

50இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட அரச பாடசாலைகளில் ஒரு தேசிய பாடசாலையும் 1,644 மாகாண பாடசாலைகளும் உள்ளதாக அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

51 முதல் 100 வரையான மாணவர்களைக் கொண்ட 1,648 அரச பாடசாலைகள் உள்ளதோடு,

அவை அனைத்தும் மாகாண பாடசாலைகள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. *(ம-7)*

## அவிசாவளை, சிகிரியாவில் நீரில் மூழ்கிய இருவர் பலி

அவிசாவளை மற்றும் சிகிரியா பகுதிகளில் நீரில் மூழ்கி இருவர் உயிரிழந்துள்ளனர். வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற இந்தச் சம்பவங்கள் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அவிசாவளை, தல்கத்துவாவ பகுதியில் உள்ள ஓடையில் குளிக்கச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 46 வயதுடைய தல்கத்துவாவ பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அதிக மழை காரணமாக ஓடையில் நீர்மட்டம் அதிகரித்திருந்த வேளையில் இவர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை சிகிரியா, திக்னபெத்த பகுதியில் உள்ள குளத்தில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் 22 வயதுடைய கிண்ணியா பகுதியைச் சேர்ந்த இளைஞர் எனத் தெரியவந்துள்ளது.

நண்பர்களுடன் சுற்றுலா சென்றிருந்த வேளையிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. சடலம் மீட்கப்பட்டு பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. *(ம-7)*

## உள்நாட்டு மதுபானங்களின் விலையை குறையுங்கள்

### பாராளுமன்றில் கோரிக்கை

*(கொழும்பு)*

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களின் விலை அதிகமாக இருப்பதால் நுகர்வோர் பெரும் சுமையை எதிர்நோக்குவதாகவும் அவற்றின் விலையைக் குறைப்பது குறித்து அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

மதுபான விற்பனை மற்றும் அதன் மூலம் கிடைக்கும் வருமானம் குறித்து பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் நிஷாந்த ஜயவீரவிடம் கேள்வி எழுப்பினார்.

பொதுவாக "கல்" என்று அழைக்கப்படும் சாராய போத்தல் ஒன்றுக்கு 1,832 ரூபாய் வரி விதிக்கப்படுகிறது.

இலங்கையில் ஒரு திருமணம் அல்லது இறுதிச்சடங்கு எதுவாக இருந்தாலும் மக்களால் அதிகம் பயன்படுத்தப்படும் சாராயம் இதுவாகும்.

அதிக விலை காரணமாக மக்கள் தரம் குறைந்த மதுபானங்களை நாடிச் செல்கின்றனர். இறுதியில் சுகாதார அமைச்சரே இவர்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

உள்நாட்டு மதுபானங்களுக்கான விலை மற்றும் வரி விதிப்பு முறையை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தினார். *(ம-7)*

## கறுப்புக்கொடி ஏந்தி போராடியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்

### சுதந்திரக்கட்சி கோரிக்கை

*(கொழும்பு)*

இலங்கையின் 78 ஆவது சுதந்திர தினத்தன்று வடக்கு, கிழக்கில் கறுப்புக்கொடி ஏந்தி அரசுக்கும், அரசமைப்புக்கும் எதிராக செயற்பட்ட நபர்களை கண்டறிந்து அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

சுதந்திர தின அணிவகுப்பின் போது இராணுவப்படை பிரிவுகளை முறையாக அறிமுகப்படுத்தும் மரபு இம்முறை மீறப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாரிய உயிர்த் தியாகத்தால் ஈட்டப்பட்ட யுத்த வெற்றியையும் இராணுவத்தின் கௌரவத்தையும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சிறுமைப்படுத்துகின்றார் என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.

ஜனாதிபதி அருகில் கடந்து செல்லும் போது ஒவ்வொரு இராணுவப் பிரிவின் விசித்திரங்கள் மற்றும் சாதனைகள் வழக்கமாகச் சொல்லப்படும். ஆனால் இம்முறை அத்தகைய கௌரவம் வழங்கப்படாமல் "டித்வா" சூறாவளி பற்றி மட்டுமே சுட்டிக்காட்டினார்.

யுத்த காலத்தின் போது தலைமை தாங்கிய இராணுவத் தளபதிகள் முன்னிலையிலேயே இந்தச் செயல் இடம் பெற்றுள்ளது என்றும் அவர் கடுமையாக விமர்சித்துள்ளார். *(ம-7)*

## பொலநறுவையில் சிறுமி படுகொலை

*(பொலநறுவை)*

பொலநறுவை மாவட்டம் தம்பால பகுதியில் 17 வயது சிறுமியொருவர் கோடரியால் தாக்கப்பட்டதில் படுகாயமடைந்த நிலையில், சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி மேலதிக வகுப்புக்குச் சென்று விட்டு குறித்த சிறுமி வீடு திரும்பிய போது பக்கத்து வீட்டைச் சேர்ந்த 26 வயதான இளைஞர் ஒருவர் சிறுமியின் தலையில் கோடரியால் தாக்கி காயப்படுத்தியுள்ளார்.

அதில் படுகாயமடைந்த சிறுமி பொலநறுவை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் தம்பால பகுதியைச் சேர்ந்த இளைஞர் கைது செய்யப்பட்டு பொலநறுவை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு

16

என்.சொக்கன்

தவிர, இதுபோன்ற நடவடிக்கைகளுக்காக இப்போது சிஐஏமீது நடவடிக்கை எடுத்துவிட்டால், அதன் பிறகு அமெரிக்கா உலகத்தைக் காவல் காப்பது எப்படி? உளவு பார்ப்பது என்ன உப்புமா சமைப்பதுபோல் சுலபமான சமாசாரமா? இப்படி ஆங்காங்கே ஒன்றிரண்டு சட்டமீறல்கள்கூடச் செய்யக்கூடாது என்றால் எப்படி?

நீண்ட யோசனைக்குப்பிறகு, இந்த விடயத்தில் நாம் தலையிடாமல் இருப்பதுதான் நல்லது என்கிற முடிவுக்கு வந்தது அமெரிக்கா. கால்பி கிடக்கிறார் என்று அவருடைய பட்டியலைக் கிடப்பில் தூக்கிப் போட்டுவிட்டார்கள்.

ஆனால், எப்படியோ இந்த விடயம் வெளியே கசிந்துவிட்டது. "நியூயார்க் டைம்ஸ்" இதழைச் சேர்ந்த சேமர் ஹெர்ஷ் என்ற பத்திரிகையாளர் இதனை மோப்பம் பிடித்துவிட்டார்.

"சிஐஏ தனது அத்து மீறல்களைப் பற்றி இப்படி ஒரு பட்டியல் தயாரித்திருப்பதாகச் சொல்கிறார்களே, அது உண்மைதானா?" என்று கால்பியிடமே நேரடியாகக் கேட்டுவிட்டார் சேமர் ஹெர்ஷ். கால்பி அதற்கு நேர்மையாக ஒரு பதில் தரப்போக, அது பரபரப்புச் செய்தியாகிவிட்டது.

1974 டிசம்பர் 22ஆம் திகதி, "நியூயார்க் டைம்ஸ்" இதழில் இதுபற்றிய விரிவான கட்டுரை வெளியானது. சிஐஏயின் வெளிநாட்டு நடவடிக்கைகள், அவர்கள் அமெரிக்கக் குடிமக்களை உளவு பார்ப்பது என்று பல விடயங்கள் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகின.

ஏற்கெனவே வாட்டர்கேட் விவகாரத்தில் தொடங்கி சிஐஏயின் பெயர் ஊரெல்லாம் நாறிக்கொண்டிருக்கிறது. இப்போது இந்தச் செய்தி வெளியான பிறகு, எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றி, அதில் அவர்களே எகிறிக் குதித்தது போலாகிவிட்டது.

"அமெரிக்க உளவு நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி நேர்மையான விசாரணை வேண்டும்" என்று பத்திரிகைகளும் பொதுமக்களும் கோரிக்கை எழுப்பத் தொடங்கினார்கள். வேறு வழியே இல்லாமல் அமெரிக்க அரசாங்கம் இதற்குச் சம்மதிக்கவேண்டியதாயிற்று.

செனட் உறுப்பினர் ஃப்ராங்க் சர்ச் என்பவர் தலைமையில் இதற்காக ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. "சர்ச் கமிட்டி" என்று அழைக்கப்பட்ட இந்தக் குழுவினர், அமெரிக்க உளவு நிறுவனங்களின் செயற்பாடுகள், எல்லை மீறல்கள் குறித்து விரிவான விசாரணைகளை நிகழ்த்தினார்கள்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில், சர்ச் கமிட்டி தனது முடிவுகளைத் தொடர் அறிக்கைகளாக வழங்கியது. இந்த அறிக்கைகளில், அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள், ஏஜென்ட்களின். நடவடிக்கைகளில் எவையெல்லாம் தவறானவை,



அவற்றைச் சரி செய்வதற்கான சிபாரிசுகள் போன்றவை விரிவாக விவாதிக்கப்பட்டன.

எழுபதுகளின் மத்தியில் நிகழ்ந்த இந்த சர்ச் கமிட்டி விசாரணைகளின் போதுதான், சிஐஏ வெளிநாட்டுத் தலைவர்களைக் கொல்வதற்காகச் செய்த முயற்சிகள் பல வெளிச்சத்துக்கு வந்தன.

தகவல்கள் சேகரிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஓர் உளவுத் துறை, இப்படிக் கொலைவெறி பிடித்துத் திரியவேண்டிய அவசியம் என்ன என்பது பலருக்கு ஆச்சரியம் அளித்தது. அதற்காக அவர்கள் பயன்படுத்திய வழிமுறைகளைக் கேட்கும்போது, இந்த ஆச்சரியம் திகிலாகவும் அருவருப்பாகவும் மாறியது.

இதன்மூலம், சிஐஏயிற்கு மட்டுமல்ல, அமெரிக்காவுக்கும் அவமானம்தான். அவர்கள் உடனடியாக இதுமாதிரியான நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்கர்களே விரும்பத் தொடங்கிவிட்டார்கள்.

ஆகவே இதற்கான விசேட உத்தரவு ஒன்றை வெளியிட்டது அமெரிக்க அரசு. இதன்மூலம் சி.ஐ.ஏயின் வெளிநாட்டுத் தலைவர்களை கொல்லும் முயற்சிகள் அனைத்தும் தடை செய்யப்பட்டன.

விடயம் இதோடு நிற்கவில்லை சி.ஐ.ஏ அமெரிக்கக் குடி மக்களை உளவு பார்த்திருப்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டது. கடிதங்களைத் திறந்து படிப்பது,தொலைபேசி அழைப்புக்களை ஒட்டுக்கேட்பது, அப்பாவி அமெரிக்கர்களைப் பின் தொடர்ந்து. அவர்களைப்பற்றிய துண்டு துக்கடாத் தகவல்களையெல்லாம் பதிவு செய்து வைப்பது என்று பல விடயங்களில் அத்துமீறி நுழைந்திருந்தார்கள்.

"ஏன் இப்படிச் செய்தீர்கள்?" என்று கேட்டால், "அவர்கள் வெளிநாட்டு ஒற்றர்களோ என்று எங்களுக்குச் சந்தேகம், அதுதான் கொஞ்சம் துப்பறிந்தோம்" என்று சுலபமாகச் சொல்லிவிட்டது சிஐஏ. ஆனால் அதற்காக, உள்நாட்டு விவகாரங்களில், அதுவும் இத்தனை அசிங்கமானமுறையில் சிஐஏ மூக்கை நுழைத்திருக்கக் கூடாது என்றது சர்ச் கமிட்டி.

அமெரிக்காவுக்கு வெளியிலும், சிஐஏயின் நடவடிக்கைகளில் ஏகப்பட்ட அத்துமீறல்கள் தெரியவந்தன. குற்றவாளிகள், அல்லது குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரிப்பதற்காக, அவர்களுக்கு போதைப் பொருட்களைக் கொடுத்துப் பழக்கப்படுத்தியிருக்கிறார்கள்.

பல பேரைக் கைது செய்திருக்கிறோம் என்கிற விடயத்தையே வெளியில் சொல்லாமல் வருடக்கணக்காக அவர்களை மறைத்து வைத்துக் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள், சில நடவடிக்கைகளுக்கு மாஃபியா கும்பலைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று பட்டியல் நீண்டது. மொத்தத்தில், சிஐஏவைக் கட்டுப் பாடில்லாத ஒரு "மத யானை" என்று வர்ணித்தது சர்ச் கமிட்டி.

இனி மேலும் இவர்களை இப்படி இஷ்டம் போல் இயங்க அனுமதிப்பதற்கில்லை, உடனடியாக அவர்களுடைய அதிகாரங்களைக் குறைத்தாகவேண்டும் என்று சிபாரிசு செய்தது.

இரகசியமானமுறையில் நடந்த சர்ச் கமிட்டி விசாரணை அறிக்கைகள் மற்றும் 'Family Jewels' ஆவணங்களின் பெரும்பாலான பகுதி, இப்போது பகிரங்கமாக வெளியிடப்பட்டுவிட்டது. ஆனால் அப்போது, அமெரிக்கர் களைப் பொறுத்தவரை, சிஐஏயின் வால் ஒட்ட நறுக்கப்பட்டிருக்கிறது என்று மட்டும்தான் தெரிந்து கொண்டார்கள்.

சர்ச் கமிட்டி சிபாரிசுகளின்படி, சிஐஏவின் பல உளவு நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டன, அல்லது மாற்றப்பட்டன. இத்தனை தீவிரமாக உளவு பார்ப்பதும், அடுத்தவர்கள் விடயத்தில் தலையிடுவதும் நமக்குத் தேவையில்லை, என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார்கள். குறிப்பாக, அமெரிக்கர்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிடுவதை உடனடியாக நிறுத்திக்கொள்ளுங்கள் என்று ஒரு குட்டும் வைக்கப்பட்டுவிட்டது.

கட்டுக்கடங்காமல் துள்ளிக் கொண்டிருந்த ஓர் அமைப்புக்கு, திடீரென்று இப்படி ஒரு மூக்கணாங்கயிறு போடப்பட்டது அதிர்ச்சிதான். ஆனால், சிஐஏயின் அதிதீவிர நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கிறபோது, அப்போது இல்லா விட்டாலும், காலப்போக்கில் இது நிச்சயம் நடந்திருக்கும் என்பது புரிகிறது.

ஆனால், சிஐஏ அதிகாரிகள் பலருக்கு, இதில் மிகுந்த மன வருத்தம். "நாங்கள் உத்தமர்கள் என்று சொல்லவரவில்லை. தப்புச் செய்தோம்தான். ஆனால், அரசாங்கம் தலையசைத்தபிறகுதானே செய்தோம்?" என்று ஆதங்கப்பட்டார்கள்.

இப்படியெல்லாம் செய்யாமல், இந்தக் காலத்தில் உளவுத் துறையை நடத்தமுடியாது என்பது அவர்களுடைய கட்சி. (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேசிய கலந்து...

படுத்தும் எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

'One Text Initiative' அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரசியலமைப்பு சீர்திருத்தம் குறித்த விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்டபோதே எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

**பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர:**

"அரசாங்கம் தனது கொள்கைப் பிரகடனத்தில் உறுதியளித்த போதிலும் புதிய அரசியலமைப்பு குறித்த விவாதங்களை வேண்டுமென்றே தவிர்த்து வருகிறது. ஜே.வி.பி அரசியலமைப்புச் சீர்திருத்தம் குறித்து தனது உண்மையான நிலைப்பாட்டை எப்போதும் மறைத்தே வந்துள்ளது" எனக் குறிப்பிட்டார்.

**பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா:**

"பெரும்பான்மைவாத அரசியல் அமைப்பில் சிறுபான்மையினரின் கருத்துக்களையும் உள்ளடக்கிய ஒரு அரசியலமைப்பை உருவாக்க அரசாங்கத்தின் பங்களிப்பு அவசியம். கடந்த தேர்தல்களில் வாக்குறுதி அளித்த போதிலும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தற்போது இதில் ஆர்வம் காட்டவில்லை" எனத் தெரிவித்தார்.

**பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க:**

"வருங்கால சந்ததியினரின் நலனுக்காக ஒரு நிலையான அரசியலமைப்பு அவசியம். அதற்கு அரசாங்கத்தின் ஈடுபாடு மிக முக்கியமானது" எனத் தெரிவித்தார்.

**முன்னாள் அமைச்சர் அநுர பிரிய தர்ஷன யாப்பா:**

"ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க புதிய அரசியலமைப்பு உதவ வேண்டும். அரசாங்கத்தின் பங்களிப்பு இன்றி அர்த்தமுள்ள சீர்திருத்தத்தை எட்ட முடியாது" எனத் தெரிவித்தார்.

**உதய கம்மன்பில:**

"ஒற்றை அரசியல் கட்சியின் நலனுக்காக உருவாக்கப்படும் அரசியலமைப்பு ஒருபோதும் எவராலும் ஏற்றுக்கொள்ளப்படாது. சந்திரிகா, ரணில் மற்றும் கோட்டாபய ஆகியோரின் காலங்களில் தயாரிக்கப்பட்ட வரைவுகள் தோல்வியடைந்ததற்கு இதுவே காரணம். அரசாங்கத்தின் சித்தாந்தம் முழு நாட்டினதும் சித்தாந்தமாக இருக்க முடியாது" எனவும் குறிப்பிட்டார். (ம-7)

## 1500 பாடசாலை...

வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின் போது எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

இந்த ஆண்டு முதற்கட்டமாக 1500 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் பலகைகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஸ்மார்ட் பலகைகளுக்காக பெற்றோரிடம் பணம் சேகரிக்க வேண்டாம் என்று சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஆகவே பணம் சேகரிக்கும் நடவடிக்கைகளை நிறுத்துங்கள் என்று பகிரங்கமாகக் குறிப்பிட்டுக் கொள்கிறேன் என்றார். (ம-7)

## கணக்காய்...

இலங்கையின் முதலாவது பெண் கணக்காய்வாளர் நாயகமாகத் தெரிவு செய்யப்பட்ட சமுதிகா ஜயரத்ன, நேற்று (05) பாராளுமன்றத்தில் சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன முன்னிலையில் இரகசியக்காப்பு சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வாளர் நாயகமாகவும் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் தலைவராகவும் அவர் இவ்வாறு சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

நாட்டின் 42ஆவது கணக்காய்வாளர் நாயகமாகப் பதவியேற்றுள்ள இவர், இப்பதவியை வகிக்கும் இலங்கையின் முதலாவது பெண் என்ற வரலாற்றுச் சாதனையையும் படைத்துள்ளார். (ம-7)

## குற்றச்சாட்டை...

இந்திய உயர்ஸ்தானிகராலயம் உத்தியோகபூர்வமாக மறுத்துள்ளது.

இச்சம்பவம் குறித்து விளக்கமளித்துள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம், இக்குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை எனத் தெரிவித்துள்ளது.

அத்துடன் கடற்றொழிலாளர்கள் விவகாரத்தில் இந்தியா எப்போதும் மனிதாபிமான அணுகுமுறையையே கடைப்பிடித்து வருவதாகவும் உயர்ஸ்தானிகராலயம் சுட்டிக்காட்டியுள்ளது.

வென்னப்புவ, வெல்லமங்கர மீன்பிடித் துறைமுகத்திலிருந்து இரண்டு மீன்பிடிப் படகுகளில் சென்ற 12 இலங்கையர்கள், இலங்கைக் கடல் எல்லைக்குள் இருந்த போது, ஜனவரி 29 அன்று இந்தியக் கரையோரக் காவல் படையினரால் தாக்கப்பட்டதாக மீனவர் குழுவொன்று குற்றம் சுமத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இ.போ...

பகுதியில் பிரேக் செயலிழந்ததால் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது.

சாரதியின் சாமர்த்தியத்தால் பயணிகளுக்கு எவ்வித அபாயமும் இல்லாமல் பேருந்து நிறுத்தப்பட்டது.

பேருந்து இடைநடுவில் நிறுத்தப்பட்டதன் காரணமாக பரீட்சைக்கு செல்லும் மாணவர்கள், அரச அதிகாரிகள், ஏனைய தொழில் துறைகளுக்குச் செல்லும் அதிகாரிகள் உரிய நேரத்திற்கு செல்ல முடியாமல் இடைநடுவில் நின்றதுடன் பருத்தித்துறையில் இருந்து மற்றொரு பேருந்து வரவழைக்கப்பட்டு பயணிகள் ஏற்றிச் செல்லப்பட்டனர். (ம-7,60)

## ரில்வின் சில்வா...

பட்டது.

புதுடெல்லியைத் தவிர, அவர்கள் குஜராத் மற்றும் கேரளாவிற்குச் செல்லவுள்ளனர்.

அங்கு அவர்கள் இந்த மாநிலங்களின் முதலமைச்சர்களுடன் கலந்துரையாடுவார்கள்.

இந்தியாவின் விவசாயம், தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு தொடர்பான மையங்களையும் அவர்கள் பார்வையிடுவார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களான கருணாநாதன் இளங்குமரன் மற்றும் கிட்ணன் செல்வராஜ் ஆகியோரும் இந்தப் பயணத்தில் இணைந்துள்ளனர். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2026.02.05 — சீட்டிழுப்பு இலக்கம் 6096 — W 3 7 4 5 3 7
அத சம்பத — W 4 5 3 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0671
சுப தவசக் — திகதி 2026.02.05 — சீட்டிழுப்பு இலக்கம் 212 — தனுசு 12 24 39 — 0675
தன நிதானய — திகதி - 2026.02.05 — சீட்டிழுப்பு இலக்கம் - 2126 — S 02 47 55 66 S
மெகா பவர் — திகதி 05/02/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2444 — T 17 35 69 75 80
ஜய — திகதி 2026.02.05 — சீட்டிழுப்பு இலக்கம் 0364 — E 5 8 9 4
கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4338 — சீட்டிழுப்பு திகதி 05.02.2026 — S 01 24 33 58 — S
ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.02.05 — சீட்டிழுப்பு இலக்கம் 1405 — மீனம் 07 25 29 60 மீனம்
உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வஸனா — 05.02.2026 — வெற்றி வாரம் 0804 — D 1 4 9 3 1 6 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,546,715.60
SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3070 — சீட்டிழுப்பு திகதி 2026.02.05 — தினம் வியாழக்கிழமை — 06 10 48 69 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 95,754,268.00
சனிதா — திகதி 05.02.2026 — வெற்றி வாரம் 5231 — 04 14 77 78 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,167,539.60
சசிரி — 900 — 05.02.2026 — வியாழக்கிழமை — 12 22 23 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,611,440.00
ராசி — சீட்டிழுப்பு வாரம் 4782 — சீட்டிழுப்பு திகதி 05.02.2026 — தினம் வியாழக்கிழமை — 01 14 20 43 தனுசு — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,809,250.40
கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — V 05 06 31 58 75 — 2246 — 05.02.2026 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.626,302,390.80
அத கோடிபதி — ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2896 — சீட்டிழுப்பு திகதி 2026.02.05 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.86,222,685.60 — 21 23 26 52 U


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SLIIT NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

CERTIFICATE IN
ROBOTICS AND ARTIFICIAL INTELLIGENCE

75 Hours - 3 Credits
Weekend/ Weekdays

INVESTMENT
LKR 25,000

COMMENCES ON 7TH MARCH 2026
CREATE A PATH TO DIPLOMA

"SCHOOL LEAVERS, PROFESSIONALS IN INDUSTRY LOOKING FOR HIGHER EDUCATION QUALIFICATION ALSO CAN APPLY"

(C-4950)

SLIIT NORTHERN UNI,
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna

077 147 1471
021 7534 807



G.C.E O/L 2025

மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

விஞ்ஞானம்

ஆசிரியர்
S.கோபிநாத் SLTS,Spl.Trd (Science)

10th February Tuesday 3.30 - 6.30 pm [Biology]
11th February Wednesday 3.30 - 6.30 pm [Chemistry]
12th February Thursday 3.30 - 6.30 pm [Physics]

- எதிர்பார்க்கைப் பகுதிகள் முழுமையாகக் கலந்தரையாடப்படும்.
- எதிர்பார்க்கைப் பகுதிகளுக்கான கையேடுகள் வழங்கப்படும்.
- வெளிமாணவர்களும் கலந்து கொள்ளலாம்.
- இடநெருக்கடியினைத் தவிர்ப்பதற்கு முற்கூட்டியே கட்டணத்தைச் செலுத்தி பதிவினை மேற்கொள்ளவும். (C-4952)

தீபம் உயர் கல்விக் கல்லூரி
077 2247781
நிர்வாகம்



மலிவு விலையில்
பாடசாலை மாணவர்களுக்கான காலுறைகள்




மொத்த கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு
076 315 6470
(C-4941)
ஸ்ரீமுருகன் No,303, K.K.S Road, Jaffna.



## Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை

01.பளை, இந்து, 1994, அனுசம், Bsc, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (55093)

02.வேலணை, இந்து, 1987, ஆயிலியம், IT Engineering (India), UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53916)

03.கொக்குவில் - உடுவில், இந்து, 1988, திருவோணம், Msc, B.Eng, Civil Engineer, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (52796)

04.கைதடி, இந்து, 1994, கார்த்திகை, Hons in Physiology, Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (51091)

05.கொக்குவில், இந்து, 1992, அனுசம், ACCA, BBA, Bsc, LLM, Ass. Director, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34763)

06.மானிப்பாய், இந்து, 1979, கார்த்திகை, BA, Supervisor, Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (28457)

07.திருநெல்வேலி, இந்து, 1986, அனுசம், Business Management, Investment coordinator, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (51412)

08.நல்லூர், இந்து, 1983, கேட்டை, Accounting Degree, Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (44878)

09.மூளாய், இந்து, 1988, பரணி, Doctorate in Finance Managment, Bank manager & Lecture, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (43978)

10.கொக்குவில், இந்து, 1985, ரோகிணி, Dip in International Business, Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (39467)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.
Unmarried, Divorce என்பன உண்டு. (6722)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 189 0367


# கொழும்பில் ஒருவர் கொலை

கொழும்பு, ஆட்டுப்பட்டி தெரு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கதிரேசன் வீதிப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி நபர் ஒருவர் கொலை செய்யப் பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் ஆட்டுப்பட்டி தெரு பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவருக்கும் மற்றுமொரு நபருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறினால் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (ம-7)

## 30% மின்சார...

தெரிவிக்கையில்,

மின் அலகு ஒன்றிற்கான சராசரி உற்பத்திச் செலவு ஏற்கெனவே 37 ரூபாவிலிருந்து 29 ரூபாவாகக் குறைக் கப்பட்டுள்ளது.

மின் அலகு ஒன்றின் உற்பத்திச் செலவைக் குறைக்காமல் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க முடியாது. தற்போது அதிக விலைக்கு வாங்கி குறைந்த விலைக்கு விற்பனை செய் யும் நிலையே காணப்படுகிறது.

நாம் நாட்டினைப் பொறுப்பேற்கும் போது மின் அலகு ஒன்றின் கொள்வனவு அல்லது உற்பத்திச் செலவு 37 ரூபாவாக இருந்தது.

தற்போது அதனை 29 ரூபாவாக, அதாவது 22 சதவீதத்தினால் குறைக்க எம்மால் முடிந்துள்ளது. எமது இலக்கு அந்தப் பெறுமதியை 25 ரூபாவாகக் குறைப்பதாகும்.

அதனைச் செய்து வாக்குறுதி அளித்தவாறு 3 ஆண்டுகளுக்குள் மின்சாரக் கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைக்க நடவடிக்கை எடுப்போம் என்றார். (ம-7)

## இயக்கச்சியில்...

விடுவிக்கப்படும் என எதிர்பார்த்துக் காத்திருந்த போது மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளதுடன் புதிய அரசாங்கத்தின் மீது நம்பிக்கையீனம் ஏற்படுமளவுக்கு இச்செயற்பாடு அமைந்துள்ளது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



## பணி வெற்றிடம்

நெல்லியடியில் இயங்கிவரும் நிதி நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக உதவியாளர் தேவை. சாதாரண தரப் பரீட்சை சித்தி பெற்று உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் அவசியம். 19 வயது முதல் 25 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நகரை அண்டி வசிப்பவர்களுக்கு முன்னுரிமை. (2024)

தொடர்பு : 077 711 7606



# நினைவஞ்சலிக் கூட்டம்



தோற்றம் 08.01.1936
மறைவு 28.12.2025

அமரர்
## அப்பாத்துரை பஞ்சலிங்கம்

கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபரும் உரும்பிராய் கிட்ஸ் பார்க், திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் ஆகிய மாதிரி முன்பள்ளிகளின் தலைவரும் நிறுவுனருமான அமரர் அப்பாத்துரை பஞ்சலிங்கம் அவர்களின் நினைவஞ்சலி கூட்டம் நடைபெறவுள்ளது.

காலம் :- (07.02.2026) சனிக்கிழமை
நேரம் :- காலை 9.00 மணி
இடம் :- உரும்பிராய் கிட்ஸ் பார்க் மண்டபம் (முருகன் வீதி, உரும்பிராய் கிழக்கு)

கல்விப்புலத்தில் கலங்கரை விளக்காகவும் தனது சீரிய பணியில் ஆளுமை மிக்க பல ஆசான்களையும், மாணவர்களையும், கல்வி நிறுவனங்களையும் உருவாக்கி காலமெல்லாம் தன்னை கல்விப்பணியில் அர்ப்பணித்த செயல்வீரனின் நினைவுகூர் நிகழ்விற்கு வருகை தருவதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதியம். (6750)



## தவறி விட்டது

கலட்டி அம்மன் கோவிலுக்கும் பிறவுண் வீதி சந்திக்கும் இடைப்பட்ட வீதியில் CBW 1975 இலக்கத்தகடு தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (6754)

077 917 7281



## மணமகள் தேவை

59 வயது, யாழ்., இந்து, கனடா பிரஜாவுரிமை உள்ள விவாகரத்து பெற்ற, பிள்ளைகள் அற்ற, டாக்டர் (MBBS) மாப்பிள்ளைக்கு மணமகள் தேவை.
சீதனம் தேவையில்லை. (6744)

077 539 9328



## வேலையாட்கள் தேவை

K.K.S றோட்டில் அமைந்துள்ள பிரபல Printing நிறுவனம் ஒன்றிற்கு கீழே உள்ள தகைமை உடையவர்கள் தேவை.

- Graphic Design
- CoralDraw & Photoshop
- Indesign

தெரிந்தவர்கள், அனுபவம் உள்ளவர்கள், வைண்டிங் அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை.

- ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (6743)

021 223 1644, 077 833 8625, 077 774 6855


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org